உ

முருகன்றுணை.

அம்பலவாணக்கவிராயரவர்கள் இயற்றிய

சதுரகிரி

அறப்பளீசுர சதகம்

திருத்தமான [illegible] பதிப்பு.

சென்னை-சூளை,

எஸ். பி. இராஜாராம்

அவர்களாற்றமது

ஸன் ஆப் இந்தியா பிரஸ்ஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

விலை] [அணா 3.

1911.

நெ-14-ஆரிமுத்துமேஸ்திரிதெருவு-சென்னை.

...ரதனும்தாய்மாரும் வந்தழைக்கஅவர்
பதியிலேபோய்விட்டாரோ — திரிசடையே

...னகராசன்வில் லொடித்தவன்றன்னை நீங்க
தட... — ...டையே

...னமூ...
...கை... — ...டையே

...வத்த...
...வார... — ...டையே

...த்திர...
இரு... — ...டையே

...காமூ... — ...றும்
கூறி... — ...டையே

...மூந்த...
இரா... — ...டையே

தூஷணர்பதி நாலாயிரந்தேரும்
கணத்திற்பொடிசெய்தாரே — திரிசடையே

...ரவேகமும்கையும் மெய்யுமென்னிருவிழி
தம்மில்கிற்கின்றதையோ — திரிசடையே

...பெருக்குப் பல்லும்ஆயுதமென்ற
வழக்கச்சொல்லைப்போலத் — திரிசடையே

...ல்நீறாக்கைக் கண்டோர்கண்கொடுத்த
புண்ணியரைக்காண்பதென்றோ — திரிசடையே

...றும்வைத்துப்பாராமல் பாவிராவணன்வார்த்தை
தனைப்போலிறைக்கிறேனே — திரிசடையே

...த்தலையும் பனங்காய்போல்விழுந்துருளப்
பார்ப்பதெந்தகாலமோநான் — திரிசடையே

...யுங்கைகளுமென்னைப் பார்க்குங்கண்களுமிந்தப்
பழிவார்த்தைசொல்லும்வாயும் — திரிசடையே

...யும்பெருங்கழுகும் நாயும்நரியும்பிச்சுப்
...பிடுங்கித்தின்னக்காணபேனோ — திரிசடையே

...மகனிக்கிரசித்தன் கொ... [illegible]

உ
கணபதிதுணை.

அம்பலவாணக் கவிராயரவர்கள் பாடிய
சதுரகிரி
அறப்பளீசுர சதகம்.

)o(

இது
மதுரைத் தமிழ்ச் சங்கத்து வித்துவானாகிய
சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்
பூவை-கலியாணசுந்தரமுதலியார் அவர்கள்
பார்வையிட்டது.

திருத்தமான பதிப்பு.

கா-சுப்பராயமுதலியார் அண்டு கம்பெனி
தமது
திரிபுரசுந்தரி விலாசம் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
நெ. 7, முல்லாசாயபு சந்து, சென்னை.

விலை] 1913. [அணா 1½



உ

சிவமயம்.

அறப்பளீசுர சதகம்.

காப்பு.

உம்பர்கோ னெம்பெருமா னேங்கறப்ப ளீசுரன்மேற், பைம்பொருள்சே ருஞ்சதகம் பாடவே யம்புவியோர், ஆக்குந் துதிக்கையுளா னன்புடையார்க்கின்பருளிக், காக்குந்துதிக்கையுளான் காப்பு.

உயிர்பிறப்பு.

கடலுலகில் வாழுமுயி ரெழுபிறப்பி னுண்மிக்க
காட்சிபெறு நரசென் மமாய்க்
கருதப் பிறத்தலரி ததினுமுயர் சாதியிற்
கற்புவழி வருதலரிது

வடிவமுட னவயவங் குறையாது பிழையாது
வருதலது தனினுமரிது
வந்தாலு மிதுபுண்ய மிதுபாவ மென்றெண்ணி
மாசில்வழி நிற்றலரிது

நெடியதன வானுத லரிததி னிரக்கமுள
நெஞ்சினே னுதலரிது
நேசமுட னுன்பதத் தன்பனாய் வருதலி
னீணிலத் ததினுமரிதாம்

அடியவர்க் கமுதமே மோழைபூ பதிபெற்ற
வதிபனெம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (க)

மனையாட்டிசிறப்பு.

கணவனுக் கினியளாய் மிர்துபாஷியாய் மிக்க
கமலைநிக ரூபவதியாய்க்
காய்சின மிலாளுமாய் நோய்பழியிலாததோர்
கால்வழியில் வந்தவளுமாய்

மணமிக்க நாணமட மச்சம் பயிர்ப்பென்ன
வருமினிய மார்க்கவதியாய்
மாமிமா மற்கிதஞ் செய்பவளு மாய்வாசல்
வருவிருந் தோம்புபவளாய்

இணையின்மகிழ் நன்சொல்வழி நிற்பவளுமாய்வந்தி
யென்பெய ரிலாதவளுமாய்
இரதியென வேலீலை புரிபவளுமாய்ப் பிறந்த
மில்வழி செலாத வளுமாய்

அணியிழை யொருத்தியுண் டாயினவள் கற்புடைய
ளாகுமெம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௨)

நன்மக்கட் பேறு.

தங்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரு
தருமங்கள் செய்துவரலும்
தன்மைமிகு தானங்கள் செய்தலுங்கன்யோக
சாதகனெனப்படுதலும்

மங்குத லிலாததன் றந்தைதாய் குருமொழி
மறுதுவழி பாடுசெயலும்
வழிவழி வருந்தமது தேவதா பத்திபுரி
மார்க்கமுந் தீர்க்காயுளும்

இங்கித குணங்களும் வித்தையும் புத்தியு
மீகையுஞ் சன்மார்க்கமும்
இவையெலா முடையவன் புதல்வனு மவனையே
யீன்றவன் புண்யவானும்

அங்கசவி ரோதியே சோதியே நீதிசே
ரரசனெம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (க.)

சகோதரரொருமை.

கூடப் பிறந்தவர்க் கெய்துதுயர் தமதுதுயர்
கொள்சுகந் தஞ்சுகமெனக்
கொண்டுதாந் தேடுபொரு ளவர்தேடுபொருளவர்
கோதில்புகழ் தம்புகழெனத் (கொள்

தேடுற்ற வவர்நிந்தை தந்நிந்தை தந்தவந்
நீதிலவர் தவமாமெனச்
சிவனென் றுடல்வே றிவர்க்கென்ன வைந்தலைச்
சீறரவ மணிவாய்தொறும்

கூடுற்ற விரையெடுத் தோருட னிறைத்திடுங்
கொள்கைபோற் பிறிவின்றியே
கூடிவாழ் பவர்தம்மை யேசகோ தரரெனக்
கூறுவதுவே தருமமாம்

ஆடிச் சிவந்தசெந் தாமரைப் பாதனே
பண்ணமெலம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே, (ச)

சற்குருவியல்பு.

வேதாந்த சித்தாந்த வழிதெரிந் தாசார
விவரவிஞ் ஞானபூர்ண
வித்யா விசேஷசற் குணசத்ய சம்பன்ன
விரவைரா க்யமுக்ய

காதாரணப்பிரிய யோகமார்க் காதிக்ய
சமாதிநிஷ்டா னுபவராய்ச்
சட்சமய நிலைமையும் பரமந்த்ர பரதந்த்ர
தருமமும் பரசமயமும்

நீதியி லுணர்ந்துதத் துவமார்க்க ராய்ப்பிரம
நிலைகண்டு பாசமிலராய்
நித்தியானந்ததை தன்யராசையுறு
தெறியுளோர் சற்குரவராம்
ஆதார மாயுயிர்க் குயிராகி யெவையுமா
மமலவெம தருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (ரு)

நன்மாணாக்கரியல்பு.

வைதாலு மோர்கொடுமை செய்தாலு மோசிறி
மாறு திகழ்ந்தாலுமோ
மனது சற்றுகிலுங் கோணாது நாணாது
மாதா பிதாவெனக்குப்
பொய்யாம னீயென்று கனிவொடும் பணிவிடை
புரிந்துபொரு ளுடலாவியும்
புனிதவுன் றனதெனத் தத்தஞ்செய் திரவுபகல்
போற்றிமல ரடில்வீழ்ந்து
மெய்யாகவே பரவி யுபதேச மதுபெற
விரும்புவோர் சற்சீடராம்
வினைவே றறும்படி யவர்க்கருள்செய் திடுவதே
மிக்கதேசிக ரதுகடன்
ஐயா புரப்பொடி படச்செய்த செம்மலே
யண்ணலெம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (சா)

பொருள்செயல்வகை.

புண்ணிய வசத்தினாற் செல்வமது வரவேண்டும்
பொருளை ரட்சிக்கவேண்டும்
புத்தியுடனதுவொன்று நூறாகவே செய்து
போதவும் வளர்க்கவேண்டும்

உண்ணவேண் டும்பின்பு நல்லவத் திராபரண
முடலிற் றரிக்கவேண்டும்
உற்றபெரியோர் கவிஞர் தமரா துலர்க் குதவி
யோங்குபுகழ் தேடவேண்டும்

மண்ணில்வெகு தருமங்கள்செயவேண்டுமுயர்மோக்ஷ
வழிதேட வேண்டுமன்றி
வறிதிற் புதைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்கமறி யாக்குருடராம்

அண்ணலே கங்கா குலத்தலைவன் மோழைதரு
மழகனெம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (எ)

தீவழி விலக்கு.

வஞ்சகர் தமைக்கூடி மருவொணா தன்பிலார்
வாசலிற் செல்லொணாது
வாதெவ ரிடத்திலும் புரியொணா தறிவிலா
மடையர்முன் னிற்கொணாது

கொஞ்சமே னுந்தீது செய்யொணா தொருவர்மேற்
குற்றஞ்சொ லொணாதயற்
கோதையர்க ளோடுபரி காசஞ்செய் யொண்ணாது
கோளுரைகள் பேசொணாது

நஞ்சதரு மரவொடும் பழகொணா திருள்வாழி
நடந்துதனி யேசொணாது
நதிபெருக் காகினதி னீஞ்சல்செ யொண்ணாது
நல்வழி மறக்கொணாது

அஞ்சாம லரசர்முன் பேசொணா திவையெலா
மறியுமெம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (அ)

ஒன்றற்கொன்றழகுசெய்வன.

வாழ்மனை தனக்கழகு குலமங்கை குலமங்கை
வாழ்வினுக் கழகுசிறுவர்
வளர்சிறுவ ருக்கழகு கல்வி கல்விக்கழகு
மாநிலர் துதிசெய்குணமாம்
சூழ்குண மதற்கழகு பேரறிவு பேரறிவு
தோன்றிடி லதற்கழகுதான்
தூயதவ மேன்மையுப காரம்விர தம்பொறுமை
சொல்லரிய பெரியோர்களைத்
தாழ்தல்பணி விடைபுரிதல் சீலநேசங் கருணை
சாற்றுமிவையா மென்பர்காண்
சௌரிமல ரோனமரர் முனிவர்முச் சுடரெலா
சரணமெமை ரட்சியெனவே
ஆழ்கடலுதித்துவரு விடமுண்ட கண்டனே
யண்ணலெம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (க

ஒன்றில்லாமையாற் பயன்படாதவை.

கோவிலில் லாதவூர் நாசியில் லாமுகங்
கொழுநனில்லாத மடவார்
குணமதில் லாவித்தை மணமதில் லாதமலர்
குஞ்சர மிலாதசேனை
காவலில்லாத பயிர் பாலரில்லாத மனை
கதிர்மதி யிலாதவானம்
கவிஞரில் லாதசபை சுதிலயை யிலாதபண்
காவல ரிலாததேசம்
ஈவதில் லாததன நியமமில் லாதசெப
மிசைலவண மில்லாதவூண்
இச்சையில் லாதபெண் போகநல மிவைதம்பி
னேதுபல னுண்டுகண்டாய்

ஆவியனை யாட்கிடந் தந்தவா கற்பதரு
வாகுமெம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௧௦)

ஒன்றற்கொன்று தகாதசேர்க்கை.

...ததமை யில்லாத லோபிய ரிடத்திலே
பொருளையரு ளிச்செய்தனை
புண்ணியஞ் செய்கின்ற சற்சன ரிடத்திலே
பொல்லாத மிடிவைத்தனை
...தியகன் மூடர்க் கருந்ததி யெனத்தக்க
நெறிமாத ரைத்தந்தனை
நிதானமுள வுத்தமர்க் கிங்கித மிலாதகொடு
நீலியைச் சேர்வித்தனை
...தியி லுயர்ந்தபே ரீனர்பின் னேசென்று
தாழ்ந்துபர வச்செய்தனை
தமிழருமை யறியாத புல்லர்மேற் கவிவாணர்
தாம்பாடவே செய்தனை
...ஆதரவி லாமலிப் படிசெய்த தென்சொலா
யமலனெம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௧௧)

குணக்கேடரியல்பு.

...மாறுத கலைகற்று நிலைபெற்ற சபையிலே
வாயிலா தவ னொருபதர்
வாள்பிடித் தெதிரிவரி னோடிப் பதுங்கிடு
மனக்கோழை தானொரு பதர்
...று வழக்குரைத் தனைவரும் சீசியென்
றிகழநிற்பா னொருபதர்
...இல்லாள் புறஞ்செலச் சம்மதித் தவளோ
டிணங்கிவாழ் பவனொருபதர்

வேறொருவர் மெச்சாது தன்னையே தான்மெச்சி
வீண்பேசுவா னொருபதர்
வேசையர்க ளாசைகொண் டுள்ளளவு மனையாளை
விட்டுவிடுவா னொருபதர்

ஆறாத துயரையும் மிடியையுந் தீர்த்தருள்செ
யமலவெம தருமைமதவேள்
அநுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (க

செயத்தக்கவை.

வாலிபந் தனில்வித்தை கற்கவேண்டுங் கற்ற
வழியிலே நிற்கவேண்டு
வளைகட றிரிந்துபொரு டேடவேண்டுந் தேடி
வளரறஞ் செய்யவேண்டும்

சீலமுடை யோர்களைச் சேரவேண்டும் பிரிதல்
செய்யா திருக்கவேண்டும்
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண்டுங்கொ
தியாகங் கொடுக்கவேண்டும்

ஞாலமிசை பலதரும நாட்டவேண்டும் நாட்டி
நன்று நடத்த வேண்டும்
நம்பணினை யடிபூசை பண்ணவேண்டு பண்ணி
னுலுமிகு பத்திவேண்டும்

ஆலமமர் கண்டனே பூதியணி முண்டனே
யனகவெம தருமைமதவேள்
அநுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (க

மேன்மேலுயர்ச்சி.

தன்மட்டி லிரவாது சீவனஞ் செய்பவன்
சாமர்த்தியமுள புருஷனும்
சந்ததம் பதின்மரைக் காப்பாற்றுவோன் மிக்
தரணிபுகழ் தருவேதனும்

பொன்மட்டி டாமலீந் தொருநூறு பேரைப்
புரப்பவன் பொருவிலிந்த்ரன்
புவிமீதி லாயிரம்பேர் தமைக்காப்பாற்று
புண்யவானே பிரமனும்
ன்மைதரு பதினு யிரம்பேர் தமைக்காத்து
ரட்சிப்பவன் செங்கண்மால்
நாளுமிவன் மேலதிக மாகுவெகு பேர்க்குதவு
நரனே மகாதேவனும்
அன்மட்டு வார்குழலி பாகனே யேகனே
யண்ணலெம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (கச)

செயற் கருஞ்செயல்.

நீர்மே னடக்கலா மெட்டியுந் தின்னலா
நெருப்பைநீர் போற்செய்யலாம்
நெடியபெரு வேங்கையைக் கட்டியேதழுவலா
நீளரவினைப் பூணலாம்
பார்மீது மணலேச் சமைக்கலாஞ் சோறெனப்
பட்சமுடனே யுண்ணலாம்
பாணமொடு குண்டுவில கச்செய்ய லாமறப்
பாவைபேசப் பண்ணலாம்
ஏர்மேவு காடியுங் கடையுற்று வெண்ணெயு
மெடுக்கலாம் புத்திசற்றும்
இல்லாத மூடர்த மனதைத் திருப்பவே
யெவருக்கு முடியாதுகாண்
ஆர்மேவு கொன்றைபுனை வேணியாய் சுரர்பரவு
மமலனே யருள்மைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (கரு)

உத்தமராவோர்.

செய்நன்றி மறவாத பேர்களு மொருவர்செய்
　　தீமையை மறந்தபேரும்
திரவியந் தரவரினு மொருவர்மனையாட்டிமேற்
　　சித்தம் வையாதபேரும்
கைக்கண்டெடுத்த பொருள்கொண்டுபோய்ப் பொரு
　　கையிற் கொடுத்தபேரும் [ளாளர்
காசினியி லொருவர்செய் தருமங் கெடாதபடி
　　காத்தருள்செய் கின்றபேரும்
பொய்யொன்று நிதிகோடி வரினும் வழக்கழிவு
　　புகலாத நிலைகொள்பேரும்
புவிமீது தலைபோகு மென்னினுங் கனவிலும்
　　பொய்ம்மையுரை யாதபேரும்
ஐயனிங் கிவரெலாஞ் சத்புருஷ ரென்றுலகி
　　லகமகிழ்வ ருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
　　ரறப்பளீ சுரதேவனே. (கக

இதுவுமது.

அடைக்கல மெனத்தேடி வருவோர்தமைக்காக்கு
　　மவனே மகாபுருஷனும்
அஞ்சாம லெதுவரினு மெதுபோகினுஞ்சித்த
　　மசைவிலான் மகாதீரனும்
தொடுத்தொன்று சொன்னசொற்றப்பாதுசெய்கின்
　　தோன்றலே மகாராஜனும்
தூறிக் கலைக்கின்ற பேர்வார்த்தை கேளாத
　　துரையே மகாமேருவாம்
அடுக்கின்ற பேர்க்குவரு மிடர்தீரத்திரட்சிக்கு
　　மவனே மகாத்யாகியாம்
அவரவர் தராதர மறிந்துமரி யாதைசெயு
　　மவனே மகாவுசிதனாம்

அடர்க்கின்ற முத்தலைச் சூலனேலோலனே
யமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (கஎ)

ஒன்றிலொன் றில்லாமை.

காமிக்கு முறையில்லை வேசைக்கு நாணில்லை
தயவர்க்கு மேன்மையில்லை
கன்னமிடு கள்வருக் கிருளில்லை விபசார
கன்னியர்க் காணையில்லை
தாமெனு மயக்கறுத் தோங்குபெரி யோர்க்குவரு
சாதிகுல மொன்பதில்லை (மொரு
தாக்ஷணிய முடையபேர்க் கிகலில்லை யெங்கு
சாரிலார்க் கிடமதில்லை
பூமிக்கு வீயாத லோபர்க்கு வளமான
புகழென்ப தொன்றுமில்லை
புலையர்க்குநிசமில்லை கைப்பொரு ளிலாதமோர்
புருஷருக் கொன்றுமில்லை
யாமினி தனக்குநிகர் கந்தரத் திறைவனே
யன்புடைய வருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (கஅ)

யாக்கை நிலையாமை முதலியவை.

காயமொரு புற்புதம் வாழ்வுமலை சூழ்தருங்
காட்டிலாற்றின பெருக்காம் (ம்
கருணைதரு புதல்வர்கிளை மனை மனைவி யிவையெலா
கானல்காட்டும் ப்ரவாகம்
மேயபுஜ பலவலுமை யிளமையழ கெவையெலாம்
வெயின்மஞ்ச ளுயிர்தானுமே
வெட்டவெளி தனில்வைத்த தீபமெனவே கருதி
வீண்பொழுது போக்காமலே
நேயமுடனேசெனிந் தன்பொடுன் பாதத்தி
னினைவுவைத் திருபோதும்

நீர்கொண்டு மலர்கொண்டு பரிவுகொண் டர்ச்சிக்க
நிமலனே யருள்புரிகுவாய்
ஆறுமறி வாளர்பணி பாதனே போதனே
யண்ணலெம தருமைமதவேள்
அநுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (கரு)

திருமங்கை யிருப்பிடம்.

நற்பரி முகத்திலே மன்னவ ரிடத்திலே
நாகரிகர் மாமனையிலே
நளினமலர் தன்னிலே கூவிளந் தருவிலே
நறைகொண்ட பைந்துளவிலே
கற்புடையர் வடிவிலே கடலிலே கொடியிலே
கல்யாண வாயிறனிலே
கடிநக ரிடத்திலே நற்செந்நெல் விளைவிலே
கதிர்பெறு விளக்கதனிலே
பாற்புடைய சங்கிலே மிக்கோர்கள் வாக்கிலே
பொய்யாத பேர்பாலிலே
பூந்தடந் தன்னிலே பாற்குடத் திடையிலே
போதகத்தின் சிரசிலே
ஆற்பெருங் கோதைமலர் மங்கைவா ழிடமென்ப
ரண்ணலெம தருமைமதவேள்
அநுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே (உ

மூதேவியிருப்பிடம்.

மிதமின்றி யன்னம் புசிப்போ ரிடத்திலு
மிகுபாஷை யோரிடத்தும்
மெய்யொன் றிலாமலே பொய்பேசியே திரியு
மிக்கபாதக ரிடத்தும்
கதிரொன்று மலர்போலமலினங் கொளும்பஞ்சு
கந்தையணி வோரிடத்தும்
கடிநா யெனச்சீறி யெவரையுஞ் சேர்க்காத
கன்னிவாழ் மனையகத்தும்

நதிசேர் கடத்திலுங் கர்த்தபத் திடையிலுஞ்
சார்ந்தவாட் டின்றிரளிலும்
காப்பிண முகத்திலு மிவையெலாங் கவலைபுரி
தெளவைவா ழிடமென்பர்காண்
அதிரூப மலைமங்கை நேசனே மோழைதரு
மழகனே மதருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (உக)

குணகுண மிரண்டினும் பயன்படாமை.

குணமற்ற பேய்முருங் கைத்தழை தழைத்தென்ன
குட்டநோய் கொண்டுமென்ன
குரைக்கின்ற நாய்மடி சுரந்தென்ன சுரவாது
கொஞ்சமாய்ப் போகிலென்ன
மணமற்ற செம்முருக் கதுபூத் தலர்ந்தென்ன
மலராது போகிலென்ன
மதுரமில் லாவுவர்க் கடனீர் கறுத்தென்ன
மாவெண்மை யாகிலென்ன
உணவற்ற பேய்ச்சுரை படர்ந்தென்ன
ஞலர்ந்துதான் போகிலென்ன
உதவாத பேர்க்குவெகு வாழ்வுவந்தா லென்ன
வோங்குமிடி வரினென்னகாண்
அணியுற்ற பைங்கொன்றை மாலிகா பரணனே
யாதியே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (உஉ)

குறைவுற்றுங் குணங்கொடாமை.

தறிபட்ட சந்தனக் கட்டைபழு தாயினுஞ்
சாரமணம் பழுதாகுமோ
தக்கபால் சுவறிடக் காய்ச்சினு மதுகொண்டு
சாரம துரங்குறையுமோ
நிறைபட்ட கதிர்மணி யழுக்கடைந் தாலுமதி
னீள்குண மழுங்கிவிடுமோ

நெருப்பிடை யுருக்கினு மடிக்கினுந் தங்கத்தி
னிறையுமாற் றுக்குறையுமோ
கறைபட்ட பைம்புயன் மறைத்தாலு மதுகொண்டு
கதிர்மதி கனம்போகுமோ
கற்றபெரி யோர்மகிமை யற்பரறி கிலரேனுங்
காசினி தனிற்போகுமோ
அறிவுற்ற பேரைவிட் டகலாத மூர்த்தியே
யையனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (உஅ)

இதற்குதவிசெய்வது இதுவெனல்.

வானவர் பிதிர்க்கண்முச் சுடர்மூவர் கோள்கட்கும்
வாழ்வுதரு மூதவியவனம்
வளமிக்க புவனந் தனக்குமேன் மேலுதவி
வாழ்வுபெற்றிடு மன்னராம்
தேனமர்நறுந்தொடையல் புனைமன் னவர்க்குதவி
சேர்ந்தகுடி படைவர்க்கமாம்
சேர்குடி படைக்குதவி விளைபயிர் பயிர்க்குதவி
சீர்பெற வழங்குமழையாம்
மேனிமிர் மழைக்குதவி மடமாதர் கற்பொன்று
வேந்தர்தந் நீதியொன்று
வேதிய ரொழுக்கமொன் றிம்மூன் றுமேயென்று
மிக்கபெரியோ ருரைசெய்வார்
ஆனமர் நெடுங்கொடி யுயர்த்தவெம் மிறைவனே
யதிபனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (உ

இதனைக்கண்டு மகிழ்வது இதுவெனல்.

நறைகமழ்தாய் மலர்முகங் கண்டுநின் றுலிப்ப
தவர்தந்த சந்ததியதாம்
சந்த்ரோ தயங்கொண்டு பூரிப்ப துயர்வாவி
தங்குபைங் குமுதமலராம்

புந்திமகிழ் வாயிரவி வருதல்கண் டகமகிழ்வ
பொங்குதாமரை மலர்களாம்
போதவும் புயல்கண்டு கண்களித் தேநடம்
புரிவது மயூரவினமாம்
சிந்தைமகிழ் யாயுதவு தாதா விணைக்கண்டு
சீர்பெறுவ திரவலர்குழாம்
திகழ்கீர்த்தி மன்னரைக் கண்டுகளி கூர்வதிச்
செகமெதா மென்பாகண்டாய்
அந்தியம் வானனைய செஞ்சடா டவியனே
யமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (உரு)

அதுவதுவாகாமை.

உள்ளன் பிலாதபேர் தித்திக்கவே பேசி
யுறவாடு முறவுமுறவோ
உபசரித் தன்புடன் பரிமா றிடாதசோ
றுண்டவர்க் கன்னமாமோ [வரு
தள்ளாதிருந் துகொண் டொருவர்போய்ப் பார்த்து
தக்கபயிர் பயிராகுமோ
தலைகர்த்த னொருவனில் லாமன்முன் சென்றிடுந்
தானையுந் தானையாமோ
விள்ளாத போகமில் லாதபெண் மேல்வரு
விருப்பமும் விருப்பமாமோ
வெகுகடன் பட்டபேர் செய்கின்ற சீவனமு
மிக்க சீவனமாகுமோ
அள்ளா திருங்கருணை யாளனே தேவர்தொழு
மாதியே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (உசு)

நற்குணங்களுக்கிடமாகாதவர்.

வெறிகொண்ட மர்க்கடம் பேய்கொண்டு கள்ளுண்டு
வெங்காஞ் சொறிப்புதரிலே

விழ்ந்துதேள் கொட்டிடச் சன்மார்க்க மெள்ளளவு
மேவுமோ மேவாதுபோல்
குறைகின்ற புத்தியா யிலற்ப சாதியாய்க்
கூடவே யிளமையுண்டாய்க்
கொஞ்சமா மதிகார முங்கிடைத் தான்மிக்க
குவலயந் தனிலவர்க்கு
நிறைகின்ற புத்தியுஞ் சீலமும் மேன்மையு
நிதானமும் பெரியோர்கண்மேல்
நேசமும் மீகையும் மிவையெலாங் கனவிலு
நினைவிலும் வாராதுகண்டாய்
அறைகின்ற சுருதியின் பொருளான வள்ளலே
யண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுரதேவனே. (உஎ

இதனால் இன்னமுறையரெனல்.

தன்றன் முடிக்கவொண் ணுதகா ரியம்வந்து
தான்முடிப்போன் றமையனும்
தன்றலைக் கிடர்வந்த போதுமீட் டுதவுவோன்
றாய்தந்தை யென்னலாகும்
ஒன்னார் செயுங்கொடுமை யான்மெலிவு வந்தபோ
துதவுவோ னிட்டதெய்வம்
யுத்திபுத் திகள்சொல்லி மேல்வருங் காரிய
முரைப்பவன் குருவென்னலாம்
எந்நாளும் வருநன்மை தீமைதன தென்னவே
யெண்ணிவருவோன் பந்துவாம்
இருதய மறிந்துதன் சொற்படி நடக்குமவ
னெவனெனினு மவனேசுதன்
அந்நாரமும் பணியு மெந்நாளுமே புனையு
மண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுரதேவனே. (உ-

அவரவரிடத்து நடக்குமுறை.

மாதா பிதாவினுக் குள்ளன் புடன்கனிவு
　　மாறாத நல்லொழுக்கம்
மருவுகுரு வானவர்க் கினியவுப சாரமுள
　　வார்த்தை வழிபாடடக்கம்
காதார் கருங்கண்மனை யாடனக் கோசயன
　　காலத்தினயபாஷணம்
கற்றபெரியோர் முதியர் வருமா தலர்க்கெலாங்
　　கருணைசே ரருள்விதானம்
நீதிபெறு மன்னவ ரிடத்ததிக பயவினய
　　நெறியுடைய பேர்க்கிங்கிதம்
நேயமுள தமர்தமக் ககமகிழ்வுடன்பரிவு
　　நேர்வ ரிடத்திலுபிரம்
ஆதிமனு நூல்சொலும் வழக்கமிது வாகுமெம
　　தையனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
　　ரறப்பளீ சுரதேவனே.　　　(உசு)

குணத்தைவிட்டுக்குற்றத்தைக்கவர்தல்.

துஷ்டவிக டக்கவிதை யாருமே மெச்சுவார்
　　சொல்லுநற் கவியைமெச்சார்
தூர்ச்சனர்க் ககமகிழ்ந் துபசரிப்பார்வருந்
　　தூயரைத் தள்ளிவிடுவார்
இஷ்டமுள தெய்வந் தனைக்கரு திடார்கறுப்
　　பென்னிலோ பேயப்பணிகுவார்
ஈன்றதாய் தந்தையைச் சற்றுமதியார் வேசை
　　யென்னிலோ காலில்வீழ்வார்
நஷ்ட லாபங்களுக்குள்ளான பந்துவரி
　　னன்றாகவே பேசிடார்
நாளுமொப் பரியாய் வந்தபுத் துறவுக்கு
　　நன்மை பலவேசெய்குவார்
அஷ்டதிசை சூழ்புவியி லோங்குகலி மகிமைகா
　　ணத்தனே யருமைமதவேள்

அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௯௦)

குணங்காண்குறி.

கற்றோர்க ளென்பதைச் சீலமுட னேசொலுங்
கனவாக்கிறுற் காணலாம்
கற்புளா ரென்பதைப் பார்க்கின்ற பார்வையொடு
கானடையினுங் காணலாம்
அற்றோர்க ளென்பதனை யொன்றிலும் வாரா
வடக்கத்தினு லறியலாம்
அறமுளோ ரென்பதைப் பூததயையென் னுநிலை
யதுகண்டு தானறியலாம்
வித்தோங்கு பயிரைக் கிளைத்துவரு துடியினால்
விளையுமென்றே யறியலாம்
வீரமுடை யோரென்ப தோங்கிவரு தைரிய
விசேஷத்தினு லறியலாம்
அத்தா குணத்திறுற் குலநலந் தெரியலா
மண்ணமலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௯௧)

கூடிற்பயன்படல்.

செத்தைபல கூடியொரு கயிருவி னதுகொண்டு
திண்கரியை யுங்கட்டலாம்
திகழ்தபல துளிகூடி யாருயின் வாவியொடு
திடேளரி நிறைவிக்கலாம்
ஒத்தநுண் பஞ்சுபல சேர்த்துநா லாயிடி
னுடுத்திடுங் கலையாக்கலாம்
ஓங்கிவரு கோலுடன் சிலையுங் கூடினு
லுயர்கவிகை யாக்கொள்ளலாம்
மற்றுமுயர் தண்டுலந் தோடுதவி டுமிகூடின்
மல்குமுளை விளைவிக்கலாம்
மனமொத்த நேயமொடு கூடியொருவர்க் கொரு
வாழின்வெகு வெற்றிபெறலாம் [வா

அற்றகனி யைப்பொருத் தரிபிரமர் தேடரிய
வமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௩௨)

அததற்கு வெற்றியிடம்.

கல்விவலா ருக்கதிக சயமது வாக்கிலே
காமுகர்க் கதிசயமோ
கைப்பொரு ளிலேவரு மருத்துவர்க் கோசயங்
கைவிசேஷந் தன்னிலே
நலமுடைய வேசையர்க் கழகிலே யரசர்க்கு
நாளுமரண சூரத்திலே
நற்றவர்க் கதிசய முலகுபுகழ் பொறையிலே
ஞானவே தியர்தமைக்கோ
குலமகிமை தன்னிலே வைசியர்க் கோசயங்
கூறிய துலர்க்கோலிலே
குற்றமில் லாதவே ளாளருக் கோசயங்
குறையாத தொழுழுனையிலே
அலைவில் குதிரைக்குநடை வேகத்தி லதிகசெய
மாமென்ப ரருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௩௩)

ஒன்றில்லாமையால் பாழ்படல்.

தாம்பூல தாரண் மிலாதமே வருபூர்ண
சந்த்ரனிகர் முகசூனியம்
சற்சன ரிலாதே வெகுசனஞ் சேர்ந்துவாழ்
தரும்பெரிய நகர்சூனியம்
மேம்பா டிலாதமன் னவர்கள்வந் தாள்வதே
மிக்கதே சச்சூனியம்
மிக்கசற் புத்திர னிலாதவே நல்லமான
வீறுசேர் க்ரகசூனியம்
சோம்பாத தலைவரில் லாதவே ளமுடன்
சொல்லுயர் சபாசூனியம்

தொல்லுலகி லனைவர்க்கு மாகிதிய மில்லதே
சுத்தசூனிய மென்பர்காண்
ஆய்பல்வத னத்தனைக் குகனையீன் றருள்செய்த
வத்தனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௧௪)

மூடர் தாரதம்மியம்.

பெண்புத்தி கேட்கின்ற மூடருந் தந்தைதாய்
பிழைபுறஞ் சொலுமூடரும்
பெரியோர்கள் சபையிலே முகடேறி வந்ததை
யிதற்றிடும் பெருமூடரும்
பண்புற்ற சுற்றஞ் சிரிக்கவே யிழிவான
பழிதொழில்செய் திடுமூடரும்
பற்றற்ற பேர்க்குமுன் பிணைநின்று பின்புபோய்ப்
பாதகித்திடு மூடரும்
கண்கெட்ட மாடென்ன வோரடிமை யலர்மீது
காய்ந்துவீழ்ந் திடுமூடரும்
கற்றறி விலாதமுழு மூடருக் கிவரெலாங்
கால்மூடரரைமூடர்காண்
அண்கற்ற நாவலர்க் காகவே தூதுபோ
னையனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௧௫)

இதற்கு இதுவேண்டுமெனல்.

தனக்குவெகு புத்தியுண் டாகிலும் வேறொருவர்
தம்புத்தி கேட்கவேண்டும்
தாகாக்க சூரனே யாகிலுங் கூடவே
தளசேகரங்கள்வேண்டும்
கனக்கின்ற வித்துவா னாகிலுந் தன்னிலுங்
கற்றோரை நத்தவேண்டும்
காசினியை யொருகுடையி லாண்டாலும் வாசவி
கருத்துள்ள மந்திரிவேண்டும்

தொனிக்கின்ற சங்கீத சாமர்த்திய னாகிலுஞ்
சுதிகூட்ட வொருவன்வேண்டும்
சுடர்விளக் காயினு நன்றாய் விளக்கிடத்
தூண்டுகோ லொன்றுவேண்டும்
அனற்கண்ணனே படிக சங்கநிகர் வண்ணனே
யையனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (கூ௪)

வறுமை வன்கொடுமை.

மேலான சாதியி லுதித்தாலு மதிலென்ன
வெகுவித்தை கற்றுமென்ன
மிக்கவதி ரூபமொடு சற்குண மிருந்தென்ன
மிகுமானி யாகிலென்ன
பாலான மொழியுடைய னாயென்ன வாசார
பரனா யிருந்துமென்ன
பார்மீது வீரமொடு ஞானவா னாயென்ன
பாக்கிய மிலாதபோது
வாலாயமாய்ப் பெற்ற தாயுஞ் சலித்திடுவள்
வந்தசுற் றமுமிகழுமே
மரியாதை யில்லாம லனைவரும் பேசுவார்
மனைவியுந் தூறுசொல்வாள்
ஆலால முண்டகனி வாயனே நேயனே
யனகனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (கூ௫)

ஈனத்துவம்.

இரப்பவன் புவிமீதி லீனனவ னுக்கில்லை
யீயென்னுமவ னவனிலீனன்
ஈகின்ற பேர்தம்மை யீயாம லேகலைத்
திடுமூட னவனிலீனன்
உரைக்கின்ற பேச்சிலே பலனுண் டெனக்காட்டி
யுதவிடா னவனிலீனன்

உதவவே வாக்குரைத் தில்லையென் றேசொலு
முலுத்தனே வவனிலீனன்
பரக்கின்ற யாசகர்க் காசைவார்த் தைகள்சொலிப்
பலகா லலைந்துதிரியப்
பண்ணியே யில்லையென் றிடுகொடிய பாவியே
பாரிலெல் லோர்க்குமீனன்
அரக்கிதழ்க் குமுதவா யுமைநேனே யெளிய
ரமுதனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௩௮)

மறைப்பனவும் வெளிப்படுத்துவனவும்.

ஜென்மித்த வருஷமும் முண்டான வர்த்தமுந்
தீதில் கிரகச்சாரமும்
தின்றுவரு மௌஷதமு மேலான தேசிகன்
செப்பிய மகாந்த்ரமும்
புன்மையவ மானமுந் தானமும் பைம்பொன்னி
புனையுமட வார்கலவியும்
புகழ்மேவு மானமும் மிவையொன்பதுந் தமது
புந்திக்குளே வைப்பதே
தன்மமென் றுரைசெய்வ ரொன்னார் கருத்தையுந்
தன்பிணியையும் பசியையும்
தான்செய்த பாவமு மிவையெலாம் வேறொருவ
தஞ்செவியில் வைப்பதியல்பாம்
அன்மருவு கண்டனே மூன்றுலகு மீன்றவுமை
யன்பனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௩

தேவர்கள் காலவளவை.

சதுரயுக மோரிரண் டாயிரம் பிறப்படிற்
சதுர்முகற் கொருதினமதாம்
சாத்றமித தினமொன்றி லேயிந்த்ர பட்டங்க
டாமுமீ ரேழ்சென்றிடும்

மதிமலியு மித்தொகையி னயனுபு ணூறுபோய்
மாண்டபோ தொருகற்பகமாம்
மாறிவரு கற்பமொரு கோடிசென் றுநெடிய
மாறனக் கோர்தினமதாம்
துதிபரவு மித்தொகையி லொருகோடி நெடியமா
றோன்றியே போய்மறைந்தால்
தோகையோர் பாகனே நீகைத் தணிமுடி
துளக்கிடுங் காலமென்பார்
அதிகமுள பலதேவர்தேவனே தேவர்கட்
கரசனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (சo)

தூய்மையிடமும் தூய்மைசெய்வனவும்.

வாம்பரி தனக்கதிக புனிதமுக மதனிலே
மறையவர்க் குயர்புனிதமோ
மலரடியி லேபுனித மொளிகொள் கண்ணடிக்கு
மாசின்முற் புறமதனிலே
மேம்படும் பசுவினுக் குப்பிற் புறத்திலே
மிக்கமட மாதருக்கோ
மேனியெல்லாம் புனித மாகுமா சௌசமொடு
மேவு வனிதயர் தமக்கும்
தாம்பிரமதற்குமிகு வெள்ளிவெண் கலமயந்
தங்க மியந்தமக்கும்
தரும்புனிதம்வருபெருக் கொடுபுளிசுணஞ்சாம்பல்
சாருமண் டாதுசாணம்
ஆம்புனித மிவையென்பர் மாமேரு வில்லியே
யனகனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (சக)

அடங்காதவற்றை அடக்குமுபாயம்.

கொடியபொலி யெருதையிரு மூக்கிலுங்கயிறொன் று
கோர்த்துவச விர்த்திகொள்வார்

குவலயந் தனின்மதக் களிறதனை யங்குசங்
கொண்டுவச விர்த்திகொள்வார்
படியில்விஷ வரவைமந் திரதந்தி ரத்தினாற்
பற்றிவச விர்த்திகொள்வார்
பாய்பரியை நொடியகடி வாளமது கொடுநடை
பழக்கிவச விர்த்திகொள்வார்
விடமுடைய துஷ்டரைச்சோர்பந்து கைக்கொண்டு
வீசிவச விர்த்திகொள்வார்
மிக்கபெரி யோர்களுங் கோபத்தை யறிவால்
விலக்கிவச விர்த்திகொள்வார்
அடியவர் துதிக்கவரு செந்தா மரைப்பதத்
தையனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (உ

ஒளியினுயர்வு.

செழுமணிக் கொளியதன் மட்டிலே யதினுமோ
செய்யகச் சோதமெனமே
செப்பிடுங் கிருமிக்கு மிச்சமொளி யதனினுந்
தீபத்தி னொளியதிகமாம்
பழுதிலாத் தீவட்டி தீபத்தி னதிகமாம்
பகல்வாத்தி யதிலதிகமாம்
பாரமத் தரப்பினொளி யதிலதிக மதினுமோர்
பனிமதிக் கொளியதிகமாம்
விழைவுதரு பரிதிக்கு மனுநீதி மன்னர்க்கும்
வீரவித ரணிகருக்கும்
மிக்கவொளி திசைதோறும்போய்விளங்கிடுமென
விரகுளோ ருரைசெய்குவார்
அழல்விழிகொ டெரிசெய்து மதனவே டனைவெ
வண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

குணங்குற்றமாதல்.

வான்மதியை நோக்கிடிற் சோரர்சா முகருக்கு
மாறாத வல்விஷமதாம்
மகிழ்நன் றனைக்காணி லிதமிலா விபசரிய
மாதருக்கோர் விஷமதாம்
மேன்மைதரு நற்சுவை பதார்த்தமுஞ் சுரரோக
மிக்கபேர்க் கதிகவிஷமாம்
வித்தியா திபர்தமைக் கண்டபோ ததிலோப
வீணர்க்கெலாம் விஷமதாம்
ஈனமிகு புன்கவிவ லோர்க்கதிக சபைகாணி
லேலாத கொடியவிஷமாம்
ஏற்றமில் லாதபடு பாவிகட் கரமென்னி
லெந்நாளு மதிகவிஷமாம்
ஆனதவ யோகியர்க ளிதயதா மரையுறையு
மண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (சுச)

உயர்வின்றித் தாழ்வும் சிறக்குமிடம்.

வெகுபான மாகிலும் மவமான மாகிலு
மேன்மையோர் செய்யிலழகாம்
விரகமே யாகிலுஞ் சரசமே யாகிலும்
விழைமந்தை செய்யிலழகாம்
தருதாழ்வு வாழ்வுவெகு தருமங்க ளைச்செய்து
சாரிலோ பேரழகதாம்
சரீரத்தி லோருன் பானமெது வாகிலுஞ்
சமர்செய்து வரிலழகதாம்
நகமேவு மதகரியி லேறினுந் தவறினு
நாளுமது வோரழகதாம்
நாய்மீதி லேனும் வீழினும் கண்டபேர்
நகைசெய்தழ கன்றென்பர்காண்
அகமாயு நற்றவர்க் கருள்புரியு மையனே
யாதியே யருமைமதவேள்

அநுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (சரு)

நல்வினை செய்தோர்.

சரணெனக் காத்தவன் மெய்யினால் வென்றவன்
றனமிளையர் துதவினோன்
தந்தைசொன் மறுதவன் முன்னவற் கானவன்
றுய்பழி துடைத்தநெடியோன்
வருபிதிர்க் குதவினோன்றெய்வமே துணையென்று
மைந்தன் மனைவியைவதைத்தோர்
மாறுண தந்தையைத் தமையனைப் பிழைக்கண்டு
மாய்த்துலகின் மகிமைபெற்றோர்
கருதரிய சிபியரிச் சந்திரன் மாபலி
கணிச்சிபோன் சுமுத்திரைசுதன்
கருடன் பகீரத னுடன்சிறுத் தொண்டனொடு
கானவன் பிரகலாதன்
அரியவல் விபீஷண னெனுமகா புருஷரா
மத்தனே யருமைமதவேள்
அநுதினமு மனதினினை தருசதுர கிரவள
ரறப்பளீ சுரதேனே. (சசு)

தீவினை செய்தோர்.

வாயிகழ்வு பேசிமிகு வாழ்விழந்தோன் சிவனை
வைதுதன் றலைபோயினோன்
மற்றொருவர் சாரத்தீ லிச்சைவைத் துடலெலா
மாறுத வடுவாயினோன்
தாயத்தி னோர்க்குள்ள பங்கைக் கொடாமலே
சம்பத் திழந்துமாய்ந்தோன்
தக்கபெரி யோர்தமை வணங்கா மதத்தினாற்
றந்திவடிவா யலைந்தோன்
மாயனைச் சபையதனி னிந்தனைசெய் தாளிகொணவ
மணிமுடி துணிந்துமாய்ந்தோன்
வருநகுட னொடுவக்க னயிராவ தன்குருடன்
மகன்வதி சிசுபாலனும்

ஆயுமறி வாளரொடு தேவர்பணி தாளனே
யவனிபுக ழருமைமதவேள்
அநுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (சஎ)

நன்னகர்.

வாவிபல கூபமுட னுறகுரு சேர்வதாய்
மலைகாத வழியிலுளதாய்
வாழைகமு கொடுதெங்கு பயிராவதாய்ச் செந்நெல்
வயல்கள்வாய்க் கால்களுளதாய்
காவிகம லங்குவளை சேரேரி யுள்ளதாய்க்
கனவர்த்தகர்கண் மறைவலோர்
காணரிய பலகுடிக ணிறைவுள்ள தாய்நல்ல
காவல னிருக்கையுளதாய்த்
தேவா லயமாடல் பாடலணி மாளிகை
சிறக்கவுள தாய்ச்சற்சனர்
சேருமிட மாகுமோ ரூர்கிடைத் ததிலதிக
சீவனமுமே கிடைத்தால்
ஆவலொ டிருந்திடுவதே சொர்க்க வாசமென்
றறையலா மருமைமதவேள்
அநுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (சஅ)

தீநகர்.

ஈனசா திகள்குடி யிருப்பதாய் முள்வேலி
யில்லில்லி னுக்குமுளதாய்
இணமுலை திறந்துதங் தலைவிரித் திடுமாதர்
ரெங்குநட மாட்டமுளதாய்க்
கானமொரு பக்கமாய் மலையோரமாய் முறைக்
காய்ச்சறப்பாத விடமாய்க்
கள்ளர்பய மாய்நெடிய கயிறிட் டிறைக்கின்ற
கற்கேணி நீருண்பதாய்
மானமில்லாக் கொடிய துர்ச்சனத் திற்கேற்ற
மணியமொன் றுண்டானதாய்

மாநிலத் தோர்தல மிருந்ததனில் வெகுவாழ்வு
வாழ்வதிலு மருநரகிலே
ஆண்நெடு நாள்கிடந் தமிழ்தலே சுகமாகு
மமலனே யருமைமதவேள்
அநுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௬௯)

முழுக்குநாள்.

வருமாதி வாரந் தலைக்கெண்ணெ யாகாது
வடிவமிகு மழகுபோகும்
வளர்திங்க ளுக்கதிக பொருள்சேரு
மங்காரவாரந் தனக்கிடர்வரும்
திருமேவு புதனுக்கு மிகுபுத்தி வந்திடுஞ்
செம்பொனுக் குயரறிவுபோம்
தேடியபொருட்சேதமாம்வெள்ளிசனியெண்ணெய்
செல்வமுண் டாயுளுண்டாம்
பரிகார முளதாதி வாரந் தனக்கலரி
பௌமனுக் கானசெழுமண்
பச்சறுகு பொன்னவற் கா மெருத் தூளொளிப்
பார்க்கவற் காகுமெனவே
அரிதா வறிந்தபே ரெண்ணெய்சேர்த் தேமுழுக்
காடுவா ரருமைமதவேள்
அநுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௭௦)

மருத்துவன்.

தாதுப் பரீக்ஷைவரு கால்தே சத்தொடு
சரீரலட் சணமறிந்து
தன்வந்த்ரி கும்பமுனி தேரர்கொங்கணர்சித்தர்
தமது வாகடமறிந்து
பேதப் பெருங்குளிகை சுத்திவகை மாத்திரைப்
பிரயோகமோடுபஸ்பம்
பிழையாது மண்டூர செந்தூர லட்சணம்
பேர்பெறுங் குணவாகடம்

சோதித்து மூலிகா விதங்கண்டுங் கண்டு
தூபதைலம் லேகியம்
சொற்பக்கு வங்கண்டு வருரோக நிண்ணயந்
தோற்றியே யமிர்தகரவாய்
ஆதிப் பெருங்கேள்வி யுடைய னாயுர்வேத
னருமைமை தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௫௧)

உண்மையுணர்குறி.

சோதிடம் பெருங்கேள்வி யுடைய னாயுர்வேத
சூழ்கிரகணஞ் சாட்சியாம்
சொற்பெரிய வாகடம் நிசமென்கை பேதிதரு
தூய்மாத்திரை சாட்சியாம்
ஆதியிற் செய்த தவ முண்டில்லை யென்பதற்
கானடிமையே சாட்சியாம்
அரிதேவ தேவனென் பதையறிய முதனூ
லரிச்சுவடியே சாட்சியாம்
நாதனே மாதேவ னென்பதற்கோ ருத்ர
நமகசமகஞ் சாட்சியாம்
நாயேனை ரட்சிப்ப துன்பார மரியய
னாளுமர்ச்சனை செய் சரணத்
தாதிநா யகமிக்க வேதநா யகனை
வண்ணமலை யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே (௫௨)

பிறவிக்குணமாறாமை

கலங்காத சித்தமுஞ் செல்வமுஞ் ஞானமுங்
கல்வியுங் கருணைவிளைவும்
கருதரிய வடிவமும் போகமுந் தியாகமுங்
கன்னூப மூள்மங்கையும்
அலங்கார வீரமும் பொறுமையுந் தந்திரமு
மாண்மையு மமுதமொழியும்

ஆனவிச் செயலெலாஞ் சனனவா சனையினு
லாகிவரு மன்றிநிலமேல்
நலஞ்சேரு மொருவரை பார்த்து பெறக்கருதி
னண்ணுமோ ரஸதாளித
னற்சுவை தனக்குவர வேம்புதவமே நெடிது
நாள்செயினு வாராதுகாண்
அலங்கார மாகமலர் கொன்றைமா லிகைசூடு
மண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே (ருங)

ஊழ்வலி.

கடலள வுரைத்திடுவ ரரிபிர்ம ருருவமுங்
காணும்படிக் குரைசெய்வார்
காசினியி னளவுபிர மாணமது சொல்லுவார்
காயத்தி னிலைமையறிவார்
விடலரிய சிவநிலை காட்டுவா ர்மூச்சையும்
விடாமற் றடுத்தடக்கி
மேன்மேலும் யோகசா தனைவிளைப்பா ரெட்டி
விண்மீதினுந் தாவுவார்
தொடலரிய பிரமநிலை காட்டுவா ரெண்வகைத்
தொகையான சித்தியறிவார்
சூழ்வினை வரும்போது சிக்கியுழல்வா ரது
துடைக்கவொரு நான்முகற்கு
அடைவல வெனத்தெரிந்த தள வில்பல நூல்சொல்
மண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரவள
ரறப்பளீ சுரதேவனே. (ருச)

ஒப்புயர் வில்லாதவை.

வேதியர்க் கதிகமாஞ் சாதியுங் கனகமக
மேருவுக் கதிகமலையும்
வெண்டிரை கொழித்துவரு கங்கா நதிக்கதிக
மேதினியி லோடுநதியும்

சோதிதரு மாதவர்க் கதியுமாங் காந்தியுஞ்
சூழ்கனற் கதிகசுசியும்
தூயதாய் தந்தைக்கு மேலான தெய்வமுஞ்
சுருசிக குயர்ந்தகலையும்
ஆதிவடமொழி தனக் கதிகமா மொழியுநக
ரன்ன தானந் தனிலுமோர்
அதிகதானமுமில்லை யென்றுபல நூலெலா
மாராய்ந்தபேருமைசெய்வார்
ஆதவன் பிரமன் விண்ணவர்முனிவர் பரவவரு
மண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௩௫)

வீண்செயல்.

வேட்டகஞ் சேர்வோரும் வீணரே வீணுரை
விரும்புவோ ரவரின்வீணர்
விருந்துகண் டில்லா டனக்கஞ்சி யோடிமறை
விரகிலோ ரவரின்வீணர்
நாட்டந் தருங்கல்வி யில்லோரும் வீணரே
நாடியவர்மேற் கவிசொல்வார்
நானிலந் தனில்வீண ரவரினும் வீணரே
நரரைச் சுமக்குமெளியோர்
தேட்டறி விலாதபெரு வீணரே யவரினுஞ்
சேரொரு வரத்துமின்றிச்
செலவுசெய் வோரதிக வீணராம் வீணுய்த்
திரியுமெளி யேனையாட்கொண்
டாட்டஞ் செயும்பாதம் பயமுடியின் மேல்வைத்த
வமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௩௬)

உதவியின்றிக்கெடுவன.

மூப்பொருவ ரில்லாத குமரிகுடிவாழ்க்கையு
மூதரணிலாத நகரும்

மொழியும்வெகு நாயகனு சேரிடமும்வருமெதுகை
மோனையில்லாத கவியும்
காப்பமை விலாதமதோர் நந்தவனமும் நல்ல
கரையிலா நிரையேரியும்
கசடறக் கற்காத வித்தையும் முபதேச
காரண னிலாததெளிவும்
கோப்புள விநோதமுடை யோரருகுபுகழாத
கோதையர்செய் கூத்தாட்டமும்
குளிர்புன னிறைந்துவரு மற்றோர மதினின்ற
கோடியர்ந் தோங்குதருவும்
ஆப்பதில் லாததே ரிவையெலா மென்றருகு
மையனே யருமைமதவேள்
அநுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (ருள

இவையேபோதுமெனல்

பொய்யாத வாய்மையுஞ் சீலமுஞ்சார்ந்தமேரோர்
பூவலஞ் செயவேண்டுமோ
பொல்லாத கொலைகள விலாதநன்னெறியுளோர்
புகழறஞ் செய்வேண்டுமோ
நையாத காமத்தை லோபத்தை விட்டபேர்
நல்லறஞ்செய வேண்டுமோ
நன்மனோ சுத்தியுண் டானபேர் மேலுமொரு
நதிபடிந்திட வேண்டுமோ
மெய்யாகி னடியரைப் பாவுவோ ருன்பதம்
விரும்பிவழி படவேண்டுமோ
வேதியர் தமைப்பூசை பண்ணுவோர் வானவரை
வேண்டியர்ச்சனை செய்வரோ
ஐயா றுடன்கமலை சோணுசலந் தில்லை
பதிபனே யருமைமதவேள்
அநுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

அரியராவோர்.

பதின்மரி லொருத்தர்சபை மெச்சிடப்பேசுவோர்
பாடுவோர் நூற்றிலொருவர்
பார்மீதி லாயிரத் தொருவர்விதி தப்பாது
பாடிப்பிர சங்கமிடுவோர்
இதனருமை யறிகுவோர் பதினாயிரத் தொருவ
ரிதையறிந் திதயமகிழ்வால்
ஈகின்ற பேர்புவியி லேயருமை யாகவே
இலட்சத்திலே யொருவராம்
ஆதிபெருக வருமூன்று காலமு மறிந்தமெய்த்
தூயர்கோடியி லொருவராம்
தொல்லுலகு புகழ்காசி யேகாம்ப ரங்கைலை
சூழுமவ னுசிபேரூர்
அதிகமுள் வெண்காடு செங்காடு காளத்தி
யத்தனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௫௧)

கற்புமேம்பாடு.

தன்கணவ னுருவமாய்த் தற்புணர வந்தோன்
றனக்கிணங் காதநிறையாள்
தழற்கதி ரெழாமலும் பொழுதுவிடி யாமலுஞ்
சாபங்கொடுத்த செயலாள்
மன்னிவள ரழன்மூழ்கி யுலகறிய வேதனது
மகிழ்நனைச் சேர்ந்துபரிவாள்
மைந்தனைச் சுடவந்த விறைவன் றடிந்தவடி
வாண்மரலை யானகனிவாள்
நன்னதி படிந்திடுவ தென்னவா ரழன்மூழ்கி
நாயகனை மேவுதயவாள்
நானிலம் புகழ்சாவி பேர்பெறு நளாயினி
நளினமலர் மேல்வைதேகி
அன்னமென வருசந்த்ர மதிதுரோபதி யென்ப
ராதியே யருண்மைமதவேள்

அநுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௯0)

கோடியுடுக்குநாள்

கறைபடா தொளிசேரு மாதிவா ரந்தனிற்
கட்டலாம் புதியசீலை
கலைமதிக் காகாது பலகாலு மழையினிற்
கடிதுநனைவுற் றுழிதரும்
குறைபடா திடர்வரும் வீரியம் போமரிய
குருதிவா ரந் தனக்குக்
கொஞ்சநாளிற் கிழியும் வெற்றிபோம்புந்தியிற்
குருவாரமதி லணிந்தால்
மறைபடா தழகுண்டு மேன்மேலு நல்லாடை
வருமினிய சுக்கிரற்கோ
வாழ்வுண்டு திருவுண்டு பொல்லாத சனியற்கு
வாழ்வுபோ மரணமுண்டாம்
அறைகின்ற வேதாக மத்தின்வடி வாய்விள
கமலனே யருமைமதவேள்
அநுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

சகுனம்.

சொல்லரிய கருடன்வா னரமரவ மூஞ்சூறு
சூகரங் கீரிகலைமான்
துய்ய பாரத்வாச மட்டையெலி புன்கூகை
சொற்பெருக மருவுமாந்தை
வெல்லரிய கரடிகாட்டான் பூனை புலிமேல்
வியங்குமிரு நாவுடும்பு
மிகவுரைசெ யிவையெலாம் வலமிருந் திடமாகி
வெற்றியுண் டதிகநலமாம்
ஒல்லையின் வழிப்பயண மாகுமவர் தலைகாக்க
வொருதுடை யிருத்தல்பற்றல்
ஒதும்ம லானையிட லிருமல் போகேலென்ன
வுபசுருதி சொல்லிவையெலாம்

அல்லறரு நல்லவல வென்பர்முதி யோர்பரவு
மமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்புளீ சுரதேவனே. (கூஉ)

இதுவுமது.

நரிமயில் பசுங்கிள்ளைகோழிகொக் கொடுகாக்கை
நாவிசிச்சிலி யோந்திதான்
நரையான் சடுத்தவாய்ச் செம்போத்துடன்மேதி
நாடரிய சுரமறையோர்
வரியுழுவை முயலிவை யனைத்தும் வலமாயிடின்
வழிப்பயண மாகைநன்றாம்
மற்றுமிவை யன்றியே குதிரையனு மானித்தல்
வாய்ச்சொல்வா வாவென்றிடல்
தருவளை தொனித்திடுதல் கொம்புகிடு முடிமுரசு
தப்பட்டை யொலிவல் வேட்டுத்
தனிமணி முழக்கெழுத லிவையெலா மூர்வழி
தனக்கேக நன்மையென்பார்
அருணகிர ணொதயத் தருணபா னுவையவனைய
வண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (கூக)

இதுவுமது.

தலைவிரித் தெதிர்வந்த லொற்றைப் பிராமணன்
றவசிசன் னாசி தட்டான்
தனமிலா வெறுமார்பி மூக்கறைபுல் லிறகுதலை
தட்டைமுடி மொட்டைத்தலை
கலங்கழி மடந்தையா குசக்கலஞ் செக்கான்
கதித்ததில் லதலமிவைகள்
ரெணவெதிர் வரவொணா நீர்க்குட மெருக்கூடை
கனிபுலா லுபயமறையோர்
நலமிகு சுமங்கலை கிழங்குரூதக மங்கை
நாளும் வண்ணானழுக்கு

நசைபெருகு பாற்கலச மணிவளையன் மலரிவை
கணுடியெதிர் வாநன்மையாம்
அலைகொண்ட கங்கைபுனை வேணியாய் பாசணியு
மண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௬௪)

உணவில்விலக்கு.

கைவிலக் குக்கொளும் பாலசப் பால்வருங்
காராக் கறந்த வெண்பால்
காளான் முருங்கைசுரை கொய்மடி பழஞ்சோறு
காநதிக் கரிந்தசோறு
செவ்வையில் சிறுக்கீரை பீர்க்கத்தி வெள்ளுப்பு
தென்னை வெல்லம லரவகம்
சிரிலா வெள்ளுள்ளி யிருள்ளி யிங்குவொடு
சிறப்பில்வெண் கத்தரிக்காய்
எவ்வமில் இவன்கோயி னிர்மாலியங் கிரண
மிலகுகட ரில்லாதவீண்
இவையெலாஞ் சீலமுடை யோர்களுக் காகா
வெனப்பழைய நூலுரைசெய்யும்
ஐவகைப் புலன்வென்ற முனிவர்விண் ணவர்போற்
மமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (௬௫)

நற்பொருளிற்குற்றம்.

பேரான சங்கா நதிக்குமதன் மேல்வரும்
பேனமே தோஷமாகும்
பெருகிவள்ளர் வெண்மதிக் குள்ளுட் களங்கமே
பெரிதான தோஷமாம்
சீராந்த போதனர்க் கொருவர்மேல் வருகின்ற
சீற்றமே தோஷமாகும்
தீதின்முடி மன்னவர் விசாரித்திடா தொன்று
செய்தவர் மேற்றோஷமாம்

தாராள மாமிகத் தந்துளோர் தாராமை
தானிரப்போர் தோஷமாம்
சாரமுள் நற்கருப் பஞ்சாறு கைப்பதவர்
தாலஞ்செய் தோஷமாகும்
ஆராயு மொருநான் மறைக்குமெட் டாதெளிரு
மண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே, (௩௬)

மணங்கோல்வதற்குமாதம்

சித்திரைத் திங்களினில் மணக்கோல மனைபுகச்
செல்வமுண் டதினுநல்மே
சேரும்வைகாசிக்கு மேனு ளரன்புரந்
தீயிட்ட தானியாகா
வெற்றிகொ ளிராவகன் றேவிசிறை சேர்கடகம்
வீரல்ல வாலணிசுகம்
மேவிடுங் கன்னியிர ணியன்மாண் டதாகாது
மேன்மையுண் டைப்பசிக்கே
உத்தமங் கார்த்திகைக் காகாது மார்கழியி
லோங்கு பாரதம் வந்தநாள்
உயர்வுண்டு மகரத்தின் மாசிமா தத்தில்விட
மும்பர்கோ னுண்டதாகா
தத்தநீ மாரனை யெரித்தபங் குனிதானு
மாகுமோ யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே (௩௭)

விருந்துவாரம்.

செங்கதிர்க் குறவுபோம் பகைவரும் விருந்தொருவர்
செய்யொணு துண்ணொணுது
திங்களுக்குறவுண்டு நன்மையாம் பகைவருஞ்
செவ்வாய் விருந்தருந்தார்
பொங்குபுத னன்மையுண் டுறவாம் விருந்துணப்
பொன்னவற் கதிகபகையாம்

புகரவற் காகிலோ நெடுநாள் விரோதமாய்ப்
போனவரவுந் திரும்பும்
மங்குனிகர் சனிவார நல்லதா மிதனினு
மனமொத் திருந்தவிடமே
வாலாய மாய்ப்போய் விருந்துண விருந்துதவ
வாய்த்தநா ளென்றறியலாம்
அங்கையில் விளங்கிவளர் திக்கமழு வாளனே
யண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (சு௮)

பூப்பூவாரம்.

அருகனுக் கதிரோகி யாணவற் சோமனுக்
கானகற் புடையளாவள்
அங்கா ரகற்குவெகு னுக்கியாவாள் புத்தி
யளவில்லைபங் குழவிபெறுவாள்
திருத்தகு வியாழத்தின் மிக்க சம்பத்தினொடு
சிறுவரைப் பெற்றெடுப்பாள்.
சீருடைய பார்க்கவற் கதிபோக வதியுமாந்
திருவுமுண் டாயிருப்பாள் (வாள்
கருத்தழிந் தெழில்குன்றி வறுமைகொண் டலைகு
காரிவா ரத்திலாகில்
களபமுலை மடமாதர் புட்பவதி யாம்வார
காலபல மென்றுரைசெய்வார்
அருத்தியுட னெளியேனை யாட்கொண்ட சோதியே
யண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (சு௯)

பூப்புலக்னம்.

வறுமை தப்பாதுவரு மேடத்தி லிடபத்தின்
யாருறு விபசாரியாம்
வாழ்வுண்டு போகமுண் டாகுமிது னங்கடகம்
வலிதினிற் பிறரையணிவாள்

சிறுமைசெயு மிடிசேர்வண் மிருகேந்திரற்கெனிற்
சீர்பெறுவள் கன்னியென்னிற்
செட்டுடைய டுலையெனிற் பிணியால் மெலிந்திடுவ
டேளினுக்குத் தனுசெனில்
நெறிசிதையவள் பூருவத் தபரநெறி யுடையளா
நீண்மகர மானமிளலாம்
நிறைபோக வதிகும்ப மெனின்மீன மெனிலோ
நெடியபே றறியுடையளாம்
அறிவாளர் மடமாதர் தமையறி யிராசிபல
னதுவென்ப ரருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (எ௰)

தீவுங்கடலும்.

நாவலந் தீவினைச் சூழ்தருங் கடலளவு
லட்சம்யோசனை யிதனையே
நாடொறுஞ் சூழ்வதி லவந்தீ வதைச்சூழ்த
னற்கழைச் சாற்றின்கடல்
மேவுமிது சூழ்வது குசத்தீ வதைச்சூழ்வன்
மிகுமதுக் கடலதனையே
விழைவொடுஞ் சூழ்தல்கிர வுஞ்சதீவம்மிதனின்
மேற்சூழ்த னெய்க்கடலதாம்
பூவிலிது சூழ்தல்சர சத்தீவ மிங்கிதைப்
போர்ப்பது திருப்பாற்கடல்
போதவது சூழ்தல்சான் மலிதீவ மாந்தயிர்ப்
புணரியப்பாலு மப்பால்
ஆவலுறு புட்கரத் தீவா மிதைச்சூழ்வ
தரும்புனற் றருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (எக)

மேலான பொருள்கள்.

சுழிசுத்த மாயிருந் ததினும் படைக்கான
துரகமோர் மாணிக்கமாம்

சூழ்புவிக் கரசனுயதிலே விவேகமுள
துரையுமோர் மாணிக்கமாம்
பழுதற்ற வதிருபவதியுமாய்க் கற்புடைய
பாவையோர் மாணிக்கமாம்
பலகலைகள் கற்றறி யடக்கமுள பாவலன்
பார்க்கிலோர் மாணிக்கமாம்
ஒழிவற்ற செல்வனு யதிலே தியாகியா
முசிதனோர் மாணிக்கமாம்
உத்தம குலத்துதித் ததிலுமோ மெய்ஞ்ஞான
முடையனோர் மாணிக்கமாம்
அழிவற்ற வேதாக மத்தின்வடி வாய்விளங்
கமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (எஉ)

உண்டியிலையும் முறையும்.

வாழையிலை புன்னைபுர சுடனற் குருக்கத்தி
மாப்பலாத் தெங்குபன்னீர்
மாசிலமு துண்ணலா முண்ணுதவோ வரசு
வனசஞ் செழும்பாடலம்
தாழையிலை யத்தியா லேரண்ட பத்திரஞ்
சகதேவ முண்முருக்குச்
சாருமிவை யன்றிவெண் பாலெருக் கிச்சிலிலை
தனினுமுண் டிடவொணுதால்
தாழ்விலாச் சிற்றுண்டி நீரடிக் கடிபருகல்
சாதகங்கள் பலவருந்தல்
சற்றுண்டன் மெத்தவுணித்தனையு மெய்ப்பிணி
தனக்கிட மெனப்பருகிடார்
ஆழிபுடை சூழுலகில் வேளாளர் குலதிலக
னுகுமெம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (எஙு)

கவிஞர் வறுமை.

எழுதப் படிக்கவகை தெரியாத மூடனை
யிணையிலாச் சேஷனென்றும்
ஈவதில் லாதகன லோபியைச் சபையதனி
லிணையிலாக் கர்ணனென்றும்
அழகற்ற வெகுகோர ரூபத்தை யுடையோனை
யதிவடிவ மாரனென்றும்
ஆயுத மெடுக்கவுந் தெரியாத பேடிதனை
யாண்மைமிகு விஜயனென்றும்
முழுவதும் பொய்சொல்லி யலைகின்ற வஞ்சகனை
மொழியரிச் சந்த்ரனென்றும்
மூதுலகி லிவ்வணஞ் சொல்லியே கவிராஜர்
முறையின்றி யேற்பதென்னோ
அழலென வுதித்துவரு விஷமுண்ட கண்டனே
யமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (எச)

கவிஞர்.

தெள்ளமிர்த தாரையென மதுரங் கனித்தபைந்
தேன்மடை திறந்ததெனவே
செப்புமுத் தமிழினொடு நாற்கவிதை நாற்பொரு
டெரிந்துரைசெய் திறமையுடனே
விள்ளரிய காவியத் துட்பொரு ளலங்காரம்
விரியிலக் கணவிகற்பம்
வேறுமுள தொன்னூல் வழக்குல கத்தியல்பு
மிக்கப்ர பந்தவண்மை
உள்ளவெல் லாமறிந் தல்லயடங் குங்கடலை
யொத்ததிக சபைகண்டபோ
தோங்கலை யொலிக்கின்ற கடல்போற்ப்ரசங்கம
துரைப்பவன் கவிஞனாகும்
துள்ளிவிஷ முண்டசனி வாயனே நேயனே
யமலனே யருமைமதவேள்

அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (எரு)

நற்சார்ப்பு.

காணரிய பெரியோர்க டெரிசனம் லபிப்பதே
கண்ணிணைகள் செய்புண்ணியம் [திரு
கருணையா யவர்சொன்மொழி கேட்டிடலபிப்ப
காதுசெய் திடுபுண்ணியம்
பேணியவர் புகழையே துதிசெய லபித்திடுதல்
பேசில்வாய் செய்புண்ணியம்
பிழையாம லவர்தமைத் தொழுதிட லபிப்பது
பெரிதுசெய் திடுபுண்ணியம்
வீணெறி செலாமலவர் பணிவிடை லபிப்பதுதன்கை
மேனிசெய் திடுபுண்ணியம்
விழைவொடவர் சொற்படி நடந்திட லபிப்பதே
மிக்கபூருவ புண்ணியம்
ஆணவ மெனுங்கல்லை களைந்தறி வினைத்தந்த
வண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (எசு)

பிறந்தநாளோடு வருகிறவாரபலம்.

சென்ம நட்சத்திரத் தாதிவா ரம்வரிற்
றீரா தலைச்சலுண்டாம்
திங்களுக் காகில்வெகு சுகபோ சனத்தினொடு
திருமாதி னருளுமுண்டாம்
வன்மைதரு மங்கார வாரம்வந்தாற் சிறிதும்
வாராது சுகமதென்பார்
மாசில்பல கலைபயில்வர் மேன்மையாம் புந்தியெனு (ம்
வாரத்துடன்கூடினால்
நன்மைதரு குருவார மதுசேர்ந்து வரிலாடை
நன்மை யுடனேவந்திடும்
நாரிய ருடன்போக மிகவிமுண் டொருவெள்ளி
நல்லவா ரத்தில்வந்தால்

அன்மருவு பீடையுண் டாமென்பர் சனியினுக்
கமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (எஎ)

இதணையுடையவர்க்கு இதுவில்லையெனல்.

பொன்னாசை யுள்ளவர்க் குறவேது குருவேது
பொங்குபசி யுள்ளபேர்க்குப்
போதவே சுசியேது ருசியேது மயல்கொண்டு
போதுமாதர் விழிவலையிலே
எந்நாளு மலைபவர்க் கச்சமொடு வெட்கமே
தென்றென்று முறுகல்விமேல்
இச்சையுள பேர்க்கதிக சுகமேது துயிலேது
வெளிதா யிருந்துகொண்டே
பன்னாளு மலைபவர்க் கிகழேது புகழேது
பாரிலொருவர்க் கதிகமே
பண்ணியிடு மூடருக் கறமேது மறமலாற்
பகர்நீதியை மொன்றுளதுகாண்
அன்னாண வருகரி யுரித்தணியு மெய்யனே
யமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (எஅ)

மழைநாட் குறிப்பு.

சித்திரைத் திங்கள்பதின் மூன்றுக்குமேனல்ல
சிரானபரணி மழையும்
தீதில்வை காசியிற் பூரணை கழித்தபின்
நேருநாலா ளினில்
ஒத்துவரு மழையுமவ் வானியிற் றேய்பிறையி
லோங்கு மேகாதசியினில்
ஒளிர்பரிதி வீழ்பொழுதின் மந்தாரமும்மழையு
முண்டா யிருந்தாடியில்
பத்திவரு தேதியைந் தினிலாதி வாரமும்
பகரு மாவணிமூலநாள்

பரிதிய மறைந்திடக் கனமழை பொழிந்திடப்
பாரில்வெகு விளைவுமுண்டாம்
அத்தனே பைங்குவளை மாலையணி மார்பனே
யண்ணலெம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (எக)

இருந்து முதவாமை.

சமயத்தி லுதவாத நிதியமேன் மிக்கதுயர்
சார்பொழு திலாத கிளையேன்
சபைமுகத் துதவாத கல்வியே னெதிருவரு
சமரத்திலாத படையேன்
விமலனுக் குதவாத பூசையே னுளமிருள்
வேளைக்கிலாத சுடரேன்
வெம்பசிக் குதவாத வன்னமே னீடுகுளிர்
வேளைக்கிலாத கலையேன்
தமதுதளர் வேளைக் கிலாதவோர் மனைவியேன்
சரசத்திலாத நகையேன்
சாமரண காலத்தி லுதவாத புதல்வனேன்
றரணிமீதி தென்பர்கண்டாய்
அமரர்க்கு முனிவர்க்கு மொருவர்க்கு மெட்டாத
வாதியே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (அ

மறையோர்சிறப்பு.

ஓராறு தொழிலையுங் கைவிடார் சௌசவிதி
யொன்றுதப்பாது புரிவார்
உதயாதி யிற்சென்று நீர்படிகுவார் கால
மொருமூன்றி னுக்கு மறவா
தாராய்ந்து காயத்ரி யதுசெபிப்பார் நாளு
மதிதிபூசைகள் பண்ணுவார்
யாகாதி தருமங்கள் மந்த்ரகிரி யாலோப
மின்றியே செய்துவருவார்

பேராசை கொண்டிடார் வைதிகநன் மார்க்கமே
பிழையாதிருக்கு மறையோர்
பெய்யெனப்பெய்யுமுகி லவர்மகிமையெவர்களும்
பேசுதற் கரிதரிதுகாண்
ஆரார் நெடுஞ்சடில வமலனே யெனையாளு
மண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே (அக)

அரசர்சிறப்பு.

மனுநீதி முறைமையும் பரராஜர் கொண்டாட
வருமதிக ரணவீரமும்
வான்விஜய மெடுசரச சாதன விசேஷமும்
வாசிமதகரி யேற்றமும்
கனமா மமைச்சரும் பலமான துர்க்கமுங்
கைகண்ட போர்ப்படைஞரும்
கஜரத பதாதியுந் துரக ப்ரவாகமும்
காலதேசங்க ளெவையும்
இனிதா யறிந்தஸ்தா னபதிக ளொடுசமர்க்
கிளையாத தளகர்த்தரும்
என்றும் வற்றாததன தானிய சமுத்திரமு
மேற்றமுள குடிவர்க்கமும்
ஆனைவோரு மெச்சவிங் கிவையெலா முடையபே
ரரசரா யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (அஉ)

வைசியர் சிறப்பு

நீள்கடல் கடந்திடுவர் மலையாளமும் போவர்
நெடிது தூரந்திரிந்து
நினைவுதடு மாறார்கள் சலியார்கள் பொருள்தேடி
நீணிலத் தரசுபுரியும்
வாளுழ வரைத்தழுது கைவசஞ் செய்வார்கள்
வருமிடம் வராதவிடமும்

மனைதையு மறிந்துதவி யொன்றுநூ ருயிட
வளர்ப்பவர் நூலதுலக்கும்
ஆள்விடுவர் மலிவுகுறை வதுவிசா ரித்திடுவ
ரளவில் பற்பலசரக்கும்
அமைவுறக் கொள்வர்விற் பார்கணக்கதிலணுவு
மறவிடார் செலவுவரிலோ
ஆளியொத் தேமலையி னளவுங்கொடுத்திடுவ
ரருள்வசிய ரருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (அ௩)

வேளாளர் சிறப்பு.

யசனுதி கருமமுந் தப்பாமல் வேதிய
ரியற்றிநல்லேர் பெறுவதும்
இராச்சியபாரஞ்செய்து முடிமன்னர் வெற்றிகொ
டென்றுநல் லேர்பெறுவதும்
வசனுதி தப்பாது தனதானியந் தேடி
வசியர்நல் லேர்பெறுவதும்
மற்றுமுள பேரெலா மிடியென் றிடாததிக
வளமைபெற் றேர்பெறுவதும்
திசைதோறு முள்ளபல தேவாலயம் பூசை
செய்யநல் லேர்பெறுவதும்
சீர்கொண்ட பைங்குவளை மாலைபுனவேளாளர்
செய்யுமேப் பெருமைகாண்
அசையாது வெள்ளிமலை தனின்மேவி வாழ்கின்ற
வண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (அ௪)

தானுதிபதி மந்திரிசேனுதிபதிகளினியல்பு.

தன்னரசர் வலுமையும் பரராச ரெண்ணமுஞ்
சாலமேல் வருகருமமும்
தானறிந் ததிமுத்தியுண் டாயினேன்
ருனுதிபதி யாகுவான்

மன்னவர் மனத்தையுங் காலதேசத்தையும்
வாழ்குடி படைத்திறமையும்
மந்திராலோசனையு மெல்லா மறிந்தவன்
வளமான மதிமந்திரி
துன்னிய படைக்குணங் கரிபரி பரீக்ஷையே
சூழ்பகைவர் புரிசூழ்ச்சியும்
தோலாத வெற்றியுந் திடமான சித்தியுள
சூரனே சேனுதிபன்
அன்னையினு நல்லமலை மங்கைபங் காளனே
யனகனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (85)

இராயசகரணிகர்சிறப்பு.

வருமோலை யுத்தரத் தெழுதிவரு பொருளினல்
வரவிடுப்போன் மனதையும்
மருவிவரு கருமமுந் தேசகாலத்தையும்
வருகரத லாமலகமா
விரைவா யறிந்தாக ரெண்ணிலெண் ணிலேயள [யின்
விடவெழுத வாசிக்கவும்
வெற்றிகொண் டேபெரிய புத்தியுடை யோன்புவி
மேன்மையா யசக்காரனும்
கருவா யறிந்துதொகை யீராறு தொடியினிற்
கடிதேற்றி டக்குறைக்கக்
கடுகையொரு மலையாக்க மலையையொரு கடுகாக்க
காட்டுவோன் கரணிகன்றான்
அருவாகி யுருவாகி யொளியாகி வெளியாகு
மண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே (86)

கோபத்தின்கொடுமை

கோபமே பாவங்க ளுக்கெலாந் தாய்தந்தை
கோபமே குடிகெடுக்கும்
கோபமே யொன்றையுங் கூடிவர வொட்டாது
கோபமே துயர்கொடுக்கும்

கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
கோபமே யுறவறுக்கும்
கோபமே பழிசெயுங் கோபமே பகையாளி
கோபமே கருணைபோக்கும்
கோபமே யீனமாங் கோபமே யெவரையுங்
கூடாம லொருவனுக்கும்
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநர
கக்குழியி னிற்றள்ளுமால்
ஆபத்தெ லாந்தவிர்த் தென்னையாட் கொண்டருளு
மண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (87)

பல்துறை.

தான்புரி தவத்தையுங் கொடையையும் புகழுவோர்
தங்களுக் கவைதழைவுறா
சற்றுமறி வில்லாம லந்தணரை நிந்தனைசெய்
தயவிலோ ராயுள் பெருகார்
மேன்படு நறுங்கலவை மாலைதயிர் பால்புலால்
வீடுநற் செந்நெலிவைகள்
வேறொருவர் தந்திடினு மனுமொழியறிந்தபேர்
விலைகொடுத் தேகொள்ளுவார்
தேன்கனி கிழங்குவிற் கிளையிவை யனைத்தையுந்
தீண்டரிய நீசரெனினும்
சீர்பெற வளிப்பரே லிகழாது கைக்கொள்வர்
சீலமுடை யோரென்பரால்
ஆன்கொடி யுயர்த்தவுமை நேசனே யீசனே
யண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (88)

தத்துவத்திரயம்.

பூதமோ ரைந்துடன் புலனைந்து ஞானம்
பொருந்துமிந் திரியமைந்து
பொருவில்கன் மேந்திரிய மைந்து மனமாதியாம்
புகலரிய கரணநான்கே

ஓதினோ ரிவையாத்ம தத்துவ மெனச்சொல்வ
    ருயர்கால நியதிகலேயோ
டோங்கிவரு வித்தைராகம் புருடன் மாயையென்
    றுரைசெய்யு மோரேழுமே
தீதில்வித் யாதத்துவ மென்றிடுவ ரிவையலாற்
    றிகழ்சுத்த வித்தையீசன்
சீர்கொள்சா தாக்கியஞ் சத்திசிவ மைந்துமே
    சிவதத்வ மென்றறைகுவார்
ஆதிவட நீழலிற் சனகாதி யர்க்கருள்செ
    யண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினே தருசதுர கிரிவள
    ரறப்பளீ சுரதேவனே. (89)

மன்மதபாணமும் அவற்றின் குண முதலியவும்.

வனசஞ் செழுஞ்சூத முடன்சோ கந்தளவ
    மலர்நீல் மிவையைந்துமே
மாரவேள் கணைகளா மிவைசெயுங் குணமுளரி
    மனதிலா சையையெழுப்பும்
வினவிலொண் சூதமலர் மெய்ப்பசலே யுண்டாக்கு
    மிகவசோ கந்துயர்செயும்
வீழ்த்திடுங் குளிர்முல்லே நீலமுயிர் போக்கிவிடு
    மேவுமிவை செயுமவத்தை
நினைவிலது வேநோக்கம் வேறொன்றி லாசையற
    னெட்டுயிர்ப் பொடுபிதற்றல்
நெஞ்சந் திடுக்கிடுத லனம்வெறுத் திடல்காச்ச
    னேர்தன்மௌ னம்புரிகுதல்
அனையவுயி ருண்டில்லே யென்னலீ ரைந்துமா
    மத்தனே யருமைமதவேள்
அனுதினமு மன்தினினே தருசதுர கிரிவள
    ரறப்பளீ சுரதேவனே (90)

மன்மதனுபகரணங்கள்.

வெஞ்சிலே செழுங்கழை விஞரிகரு வண்டினம்
    மேல்விடுங் கணைகளலராம்
வீசிடுந் தென்றறேர் பைங்கிள்ளே யேபரிகள்
    வேழங்கெ டாதவிருளாம்

வஞ்சியர் பெருஞ்சேனை கைதையுடை வாணெடிய
வண்மைபெறு கடன் முரசமாம்
மகரம்ப தாகைவரு கோகிலங் காகளம்
மனதே பெரும்போக்களம்
சஞ்சரிக விசைபாடல் குமுதமே யன்கவிகை
சாரிரதி யேயனைவியாம்
தறுகண்பட மாதரிள முலைமகுட மாமல்கு
றவரு திருக்குமிடமாம்
அஞ்சுகணை மாரவேட் கென்பரெளியோர்க்கெலா
மமுதமே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (91)

பகைகொளத்தகாதவர்.

மன்னவ ரமைச்சர்துர்ச் சனர்கோளர் தூதரொடு
மாறுத மர்பமுடையோர்
வல்லவர்க ணீசர்மிகு பாகஞ்செய் தன்னமிடு
மடையாமந் தரவாதியர்
சொன்னமுடையோர்புலைய ருபதேசமது செய்வே
சூழ்வயித் தியர்கவிதைகள்
சொற்றிடும் புலவரிவர் பதினைந்து பேரொடுஞ்
சொற்பனந் தனிலாகிலும்
நன்னெறி யறிந்தபேர் பகைசெய் திடார்களிந்
நானிலத் தென்பர்கண்டாய்
நாரியோர் பாகனே வேதாக மம்பரவு
நம்பனே யன்பர்நிதியே
அன்னமூர் பிரமனுங் கண்ணனுங் காணாத
வண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (92)

இதாக்கிதம்செய்துபயன் கொள்வன.

சுவைசோ கரும்பைவெண் பாலைப் பருத்தியைச்
சொல்லுநன் னெல்லையெள்ளைத்
தூயதெங் கின்கனியை யெண்ணாத துட்டரைத்
தொண்டரைத் தொழுதொழும்பை

நவைதீரு மாறுகண் டித்தே பயன்கொள்வர்
நற்றமிழ்க் கவிவாணரை
நலமிக்க செழுமலரை யோவிய மெனத்தக்க
நயமுள்ள நாரியர்தமைப்
புவிமீதி லுபகார நெஞ்சரைச் சிறுவரைப்
போர்வீர ரைத்தூயரைப்
போதவும் பரிவோ டிதஞ்செய்ய மிகுபயன்
புகழ்பெறக் கொள்வர்கண்டாய்
அவமதி தவிர்த்தென்னை யாட்கொண்ட வள்ளலே
யண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (93)

தருமம்.

பெறுமில்பெறு வித்தலொடு நாளோலை நாடோறும்
பிள்ளைக ளருந்திடும்பால்
பேசரிய சத்திர மடமா வுரிஞ்சுகல்
பெண்போக நாவிதன்வண்ணான்
மறைமொழிக ளோடிதண் ணீர்தலைக் கெண்ணெய்பசு
வாயினுறை பிணமடக்கல்
வாவியிரு முயிர்மீட்ட லின்பொரு ளடைக்காய்
வழங்கல்சுண் ணாம்புதவுதல்
சிறையுற் றவர்க்கமுது வெற்றிலங் காத்தல்பொழில்
செய்தன்முன் னூலின்மணம்
திகழ்விலங் கூண்பிச்சை யறுசமய ருக்குண்டி
தேவரா லயமவுஷதம்
அறைதல்கற் போர்க்கன்ன நாலெட் டறங்களுமு
னன்னைசெய லருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (94)

இல்லறம்.

தந்தைதாய் சற்குருவை யிட்டதெய் வங்களைச்
சன்மார்க்க முளமனைவியைத்
தவறாத சுற்றத்தை யேவாத மக்களைத்
தனைநம்பி வருவோர்களைச்

சின்னதமகிழ் வெய்தவே பணிவிடைசெய் வோர்களைத்
தென்புலத் தோர்வரினுரைத்
தீதிலா வதிதியைப் பரிவுடைய துணைவரைத்
தேனுவைப் பூசுரர்தமைச்
சந்தரஞ் செய்கடனை யொன்றுமிவை பிழையாது
தான்புரிந் திடவில்லறம்
சாருநல முடையராந் துறவறத் தோறுமிவர்
தம்முடன் சரியாயிடார்
அந்தரி யுயிர்க்கெலாந் தாய்தனினு நல்லவட்
கன்பனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (95)

புராணம்.

தலைமைசேர் பௌடிகமி லிங்கமார்க் கண்டமெழில்
சாரும்வா மனயச்சமே
சைவம் பெருங்கூர்மம் வரும்வரா கங்காந்த
சரிதமே பிரமாண்டமும்
நிலைமைசே ரிப்பத்து முயர்சிவ புராணமா
நெடியமால் கதைவைணவம்
நீதிசேர் காருட நாரதம் பாகவத
நீடியபுராண நான்காம்
கலைவலர்சொல் பதுமமொடு பிரமகை வத்தமே
கமலா லயன்காதையாம்
கதிரவன் காதையே சூரியபு ராணமாங்
கனல்காதை யாக்கினேயம்
அலைகொண்ட நதியும்வெண் மதியுமறு கும்புனையு
மத்தனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (96)

புகழ்ச்சி.

பருகாத வமுதொருவர் பண்ணாத பூஷணம்
பாரின்மறை யாதநிதியம்
பரிதிகண் டலராத நிலவுகண் டுலராத
பண்புடைய பங்கேருகம்

ஒருகாத புயல்கலைக ளொருகாத திங்கள்வெங்
காணிலுறை யாதசியம்
கருதரிய விக்குண மனைத்துமுண் டானபேர்
காசினியி லருமையாகும்
தெரியவுரை செய்யின்மொழி கீர்த்திவரு கல்வியொடு
சீரிதய மீகைவதனம்
திடமான வீரமிவை யென்றறிகு வார்களிச்
செகமெலாங் கொண்டாடவே
அருள்கற்ப தருவென்ன வோங்கிடுந் தானதுரை
யாகுமெம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (97)

திருமாலவதாரம்.

சோமுக சுரனைமுன் வதைத்தமரர் துயர்கெடச்
சுருதிதந் தனுமற்சமாம்
சுரர்தமக் கமுதீந்த தாமையாம் பாய்போற்
சுருட்டிடா கில்லெடுத்தே
போமிரணி யாக்கதனை யுயிருண்ட தேனமாம்
பொல்லாத கனகனுயிரைப்
போக்கியது நரசிங்க முலகளந் தோங்கியது
புனிதவா மனமூர்த்தியாம்
எழுறு மிராவணனை வென்றவ னிராகவனி
ரவிகுலம் வேரறுத்தோன்
ஏர்பரசு ராமன்வரு கண்ணனொடு பலராம
னிப்புவி பயந்தவிர்த்தோர்
ஆமினிய கற்கியினி மேல்வருவ திவைபத்து
மரிவடிவ மருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (98)

சிவமூர்த்தி.

பிறைசூடி யுமைநேசன் விடையூர்தி நடமிடும்
பெரியனுயர் வதுவைவடிவன்
பிச்சாட னங்காம தகனன்மற லியைவென்ற
பெம்மான் புரந்தகித்தோன்

மறமலி சலந்தரனை மாய்த்தவன் பிரமன்முடி
வௌவினோன் வீரேசுரன்
மருவுநர சிங்கத்தை வென்றவ னுமைபாகன்
வனசரன் கங்காளனே
விறன்மேவு சண்டேச ரக்ஷகன் கடுமாந்தி
மிக்கசக்கர முதவினோன்
விநாயகற் கருள்செய்தோன் குகனுமை யுடன்கூடி
மினிரேக பாதன்சுகன்
அறிவரிய தக்ஷிணா மூர்த்தியொ டிலிங்கமா
மையனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (99)

கவி வணக்கம்.

மலர்தாறி பைங்குவளை மென்முல்லை மல்லிகை
மருக்கொழுந் துயர்கூவிளம்
மற்றுமுள வாசமலர் பத்திரஞ் சிலகூடி
மணிமுடி தனிற்பொறுத்தே
சிலரெருக் கொடுவனத் தும்பூளை பச்சறுகு
செம்முள்ளி மலர்சூட்டவே
சித்தம்வைத் திடவுமங் கீகரித் திடுமகா
தேவதே வாதெரிந்தே
கலைவல ருரைக்குநன் கவியொடம் பலவாண
கவிராய னுரைமென்பன்
கவிதையுஞ் சூடியே மனமகிழ்ந் திடுவதுன்
கடனருகு மடனசமும்
அலைபெருகு கங்கையுஞ் செழுமதிய மும்புனையு
மமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (100)

அறப்பளீசுர சதகம்.

முற்றிற்று.

ஸ்ரீவடிவுடையாம்பாள் துணை.

புஷ்பகாந்தி

என்னும்

பூவையர்பூஷணம்.



இருபாலரும் வாசிக்கத்தகுந்த

ஓர் செந்தமிழ் நாவல்.

இதன் விலை அணா 8.

வி. பி. சார்ஜ் அணா 3.

நாவல்களில் பிரியமுள்ள நண்பர்காள்! பிரபஞ்சத்தினில் காணுதற்கரிய பெரிய நூதன கதாவாசகங்களையும் பார்த்தும் படித்தும் இருக்கலாம்.

ஆயினும், பட்டணபதி பக்ஷணமகாராஜனது புத்திரன் வீரவிஜயனென்பவன் தன் தந்தையின் பகைவரை ஜெயித்துத் திரும்புகையில் தனது அன்னைத்திறல் திசைதப்பி திக்பிரமை கொண்டு ஈ கொதோரவூர் விருத்தாசலம் பிள்ளையை நட்பு கொண்டு பூபதி நகராளும் மன்னுதிமன்னன் குமாரத்தி புண்ணிய புஷ்பகாந்தி வெளியிட்ட இருபது விசித்திர வினுமொழிக்கு விடைபகராது விழித்திருந்த பல வேந்தர் முன்னில் வீரவிஜயன் பதில்மொழிகூறி மணமுடித்த நாயகன் உத்திரவுப்படி புஷ்பகாந்தி கல்வி கற்கை முதல் இல்லாயிரக்கை வரையினும் இருபத்தைந்து பிரசங்கஞ்செய்து பின்னர் ஷை சயதேங்களை மகுடஞ்சூடி மகவைப்பெற்று வாழ்நாளில், வர முனிவராகவந்த நாரதமுனியுடன் சென்று பிரமலோகத்தடைந்து பிரம்மா சரஸ்வதியாக பழையபடி வீற்றிருந்தனர்.

சாவித்திரி — சத்தியவந்தன்.

யாவரும் அவசியம் வாங்கி வாசிக்கவேண்டிய அற்புதகரம்.

புதிய தமிழ்டிராமா இதன் விலை அணா 4.



த்யூமத்சேனமகாராஜன் சாலவபுரியை அரசாண்டுவருங்காலத்தில் கடகேது என்னும் கொடியவரசன் த்யுமத்சேனன் புத்திரனாகிய சத்தியவந்தனில்லாத சமயம்பார்த்து த்யுமத்சேனன்மேல்படையெடுத்து ராஜ்யத்தைக் கைக்கொண்டு த்யுமத்சேனனையும் தன்மனைவியையும் கண்களைப் பிடுங்கி காட்டிற்கோட்டிவிட புத்திரனாகிய சத்தியவந்தன் தன் தோழனாகிய சுமாலியினால் சங்கதிதெரிந்து வருகும் வழியில் நந்தவனத்தில் சத்தியோப்பாற அந்நந்தவனத்தில் சாவித்திரியை ஓர் பெரும்புலி துரத்திவர அப்புலியை சத்தியவந்தன் சம்மரித்துவிட இருவர்களும் ஒருமனதாகி சத்தியவந்தன் வந்து மணம்புரிவதாக வாக்களித்து கண்ணிழந்த தாய்தந்தையர்களைப்பார்த்து விசனமுற்றிருக்குங்கால் சாவித்திரி சத்தியவந்தனைக்கண்ட நாள் முதலாக அதே விசனமாயிருப்பதை சேடிகளால் தனது தாய்தந்தையாரிந்து மணஞ்செய்வதாக புகல அச்சமயம் நாரதர் பிராப்தமாகி மாதின்கருத்தின்படி சத்தியவந்தனை மணஞ்செய்து மந்திர உபதேசஞ்செய்துபோக, ஒருவருடமாய்விட்டபடியால் எமன் சத்தியவந்தனுயிரைக்கவர சாவித்திரி எமனை விடாமல் பின்பற்றி எமலோகஞ்சென்று மாமன்மாமிகளுடைய கண்ணும் கணவனுடைய உயிரையும் வாங்கிவந்து சத்தியவந்தனை உயிர்பெறச்செய்து முடிசூட்டுதல். சுபம்.

உ

பராசத்தி துணை.

முன்னோர் கையாண்டுவந்த
பஞ்சரத்தின வராகிமாலை,
நவரத்தின வராகிமாலை,
வாலை தியானமும்
அடங்கிய

பெரிய வராகிமாலை.

இந்நூல் யாவரும் எளிதிலுணருமாறு
மூலமந்திர யந்திர பூஜாவிதியுடன்
அச்சிட்டிருக்கிறது.

இதன் விலை அணா 4.



இச்சிறிய நூலானது ஒவ்வொருவருக்கும் வேண்டிய அவசியமே.

அதாவது, இந்நூலில்சொல்லியுள்ள கிரமப் பிரகாரம் பூஜித்துவரும்பக்ஷத்தில் சத்தியென்னும் அம்மை வசியமாவதற்கு யாதொரு ஆக்ஷேபனை யிரா.

இதில் விபூதி மந்திரிக்க, பூச்சிகடிகளுக்கு மந்திரிக்க, பசாசுவிலக்க, வாலை தரிசனம், ராஜவசியம், மாரணம் இன்னும் அநேகவித பூஜைகளும் அடங்கியிருக்கின்றன. இதனை வாங்கி பார்வையிட்டால்மாத்திரந்தான் உண்மை விளங்கும்.

இதைப் படிக்கவேண்டுமோ ?

ஆம் அவசியம் படிக்கத்தான் வேண்டும்.

பார்த்தவர்களே பாக்கியசாலிகள்!	பாரெங்கும் பரவி வரும்	படித்தவர்களே பாக்ஞானிகள்!

இக்கியுலிக அண்டர் தி. ஏபில் மானேஜர்

MS. ஜெகஜாலப்புரட்டன்.

புத்தகம் 1-க்கு விலை அணா 4.

தபாற்கூலி அணா 2.

(இது ஓர் இனிய செந்தமிழ் நாவல்.)



இப்பாரினில் விளங்கும் செப்பரிய நாவல்களை வாசிக்கும் நேயர்காள்? உங்கள் முன்னிலையில் சொல்ல வந்தனோர் எமது ஜெகஜாலப்புரட்டன் கதையை மாயாஜாலம், கண்கட்டு ஜாலம், மாந்திரீக ஜால புத்தகம் போன்ற ஜாலக்கதைகளென்று எண்ணிவிடாதீர்கள்.

ஜெகஜாலப்புரட்டன் உலகப்புரட்டன்களிருவர் வடதேசத்தில் அவதரித்து தென்தேயத்திற்கு வந்து ஆங்குள்ள நிபுணத்துவம் பொருந்திய மன்னன் குடிஜனங்கள், தாசிவேசிகள் அனைவரையும் பேராசையை நிராசையாகும்படி அவ்வூரார் பொருள் பூஷாதிகளனைத்தையும் வாசாகைங்கரிய வார்த்தைகளாடி புரட்டுத்தனம் செய்த வேடிக்கை ஒவ்வொன்றையும் படித்தவர் கேட்டவர் இக்கதைக்கு நிகர் விகட கதைகளெல்லாம் முன்னுக்குவராதென்று சொல்லி மூடியாசிரிப்பை அடைவாரென்பது யாம் சொல்லாமுன்னமே வாங்கி வாசித்தஅன்பர்களுக்கே தெரியுமென்று புகழ்ந்துரையாது விட்டனம்.

௰௫ பேயாம்அரக்கனையும் சேனைகளையுமென்றன்
பிராணநாதர்கொல்லாரோ திரி
தாயேஉன் அப்பன்வீடு பாற்கடல்போலேயோங்கி
தழைக்கநான்காண்பேனே திரி
௰௬ இடதுகண்துடிப்பதும் இடதுதோள்துடிப்பதும்
ஏதோஅறிகிலேனே திரி
இடதுசெவியில்ஒரு வண்டுவந்தூதக்கண்டேன்
என்னசொல்லடிஅம்மா திரி
௰௭ வந்தசாமிமுன் மிதிலையில்என்கைதொட
வரக்கண்டகுறியிவை திரி
அந்தநாளில்க்குறி இந்தநாளிலுங்கண்டேன்
அதிசயம்ஏதோஅம்மா திரி

சீதாதேவிக்குத் திரிசடை கனாநிலை உரைத்த

விருத்தம்.

கோதைமனம்தளர்ந்திக்கக் குறிகுணங்கள்சொன்னளவி
ஓதுவன்இப்போதுனக்கோர் சுபாவத்தைசொல்லுவன்
காதலியேநானும்நல்ல கனவுகண்டேன்கேள்எனவே
சீதைமனம்தேறிடத் திரிசடையும்சொல்வாளே.

௮-தரு-சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்கனவைகேளாயம்மா சானகி அம்மா ஏனுனக்குகவ

அநுபல்லவி.

மங்களமுனக்குண்டாமே வல்லரக்கன்வாழ்வுபோமே

சரணங்கள்.

௧. சுந்தரிமண்டோதரி வெறுந்தலையைச்சீவி
அந்திடத்திலேஅவள் விழுந்தழுதுகூவி
இந்தமன்னன்வீடுவிட் டெழுந்தொருபெண்தாவி
என்தகப்பன்வீட்டில்அவள் வந்துகந்துமேவி

நந்திவாக்கிய

'என்னும்' சோதிடசாஸ்திரம்.

இரண்டாம்பாகம்.

ஆழிசூழுலகத்தின்கண் ணுள்ள ஆரிய நண்பர்கள் அ
வருக்கும் சோதிடர்களுக்கும் இன்னு மற்றுமுள்ள கன
வான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:-இதுகாறும், அ
சோதிட சாத்திரங்களையும் ஆரூட சாத்திரங்களையும் கண்
ற்றுக் களிப்படைந்திருந்தபோதிலும் இந்த 'நந்திவாக்கிய'
னும் சோதிடசாஸ்திர மிரண்டாம் பாகத்தில் கூறும் அதிக
சரியமுள்ள பலன்களடங்கிய இவ்வரிய நூலைக் கண்ணு
மின்றி இப்பத்திரிகைகள் மூலம் எடுத்தோத முடியாதென்ப
திண்ணமேயாம். ஆயினும் இந்த நூலில் சொல்லும் சில
றைமட்டும் தெரியப்படுத்துமவை யாதெனில்:—

சில காலங்களுக்குமுன் இந்த நூலின் முதற்பாகத்தில்
வற்றோடு மேடலக்கினமட்டும் அச்சிட்டு வெளியிடப்பட்டி
கிறது இப்போது பல்லோர்களுக்கும் உபயோக மாகும்பெ
ட்டு மற்ற 11-லக்கின பலன்களும் இதுவரையிலும் எந்த நூ
களிலு மெடுத்தோத முடியாத மிகத்தெளிவாயும் சூக்ஷமாயும் செ
லக்கூடிய அதிக அருமையான ஆரூடபலன்களும், மனைமு
ர்த்த லக்னபலன்களும், மனைக்கு கிரகமடைக்கும் விப
ளும் இன்னும் சில பலன்களுடனும்சேர்த்து ஒரேகட்ட
பதிப்பித்து அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது
இந்தநூல் ஒன்றைமட்டும் யாதா மொருவர் கருத்திலுன்
கையாண்டு வருபவர்களானல் அம் மகானுபவன் மிகவு
ந்தபண்டிதனுவா னென்பதற்கு யாதொரு தடையுமிராது.

தவிர இந்த நூல் மிகவும் அருமையான தென்பது மு
அச்சிட்டு வெளிவந்திருக்கு மிந்நூலின் முதற்பாகத்தால் ய
ருக்கும் நன்குய்த் தெரியவரும். கிளைஸ்கடிதம்,

உயர்ந்த கலிகோபயிண்டு விலை ரூபா 1—8—0.

எஸ். பி. இராஜாராம் அண்டு கம்பேனி,

சூளை போஸ்டு, மதராஸ்.